தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 29—10—55 | சனிக்கிழமை | இதழ் 20

தமிழின்மீது மூன்றும் படையெடுப்பு!

அன்பு கெழுமிய தலைவர் அவர்களே, மாணவத் தோழர்களே! சமீபத்தில் இதே கல்லூரியில் என் அருமை அண்ணா அவர்கள் 'நேற்று-இன்று-நாளை' என்ற தலைப்பில் மிக அழகியதோர் சொற்பொழிவாற்றிச் சென்றிருக்கிறார்கள். அவரிடம் கேட்ட பாடம் கொண்டு அதே கண்ணோட்டத்தில் மொழியின் நிலைகளை ஆராய விரும்பியே, இந்தக் கல்லூரி நண்பர்கள், பேசப் போகும் பொருளுக்கு என்ன தலைப்பு என்று என்னிடம் கேட்டபோது, 'மொழி-

யை எல்லாம் தாங்கியும் வலிகுன்றாது நிற்கும் தமிழ் மொழி. இந்தப் பல்லாயிரம் ஆண்டுகளிலும் தமிழின் தனித் தன்மையைக் குலைக்க முயன்றவர்கள் மிகப் பலர். தமிழை மோதி அழிக்க வந்த மொழி உருவங்கள் இரண்டு. அத்தனையையும் எதிர்த்துத் தாக்குப்பிடித்து நின்றது தமிழ். தமிழ் தனித் தமிழாக இருக்கும்போது எப்படி இருந்தது? சங்க இலக்கியங்களைப் பார்த்தால் தெரியும். அவற்றில் காணப்படும் வார்த்தைகளின் அழுத்தம், அந்தத் தனித்

தன்மையின் சிறப்பை வெளிப் படுத்

கின்றது. ஆகவேதான் தமிழ் தனித் தன்மையோடு இருந்தபோது காணப்பட்ட தமிழர் பண்பாட்டுக்கும் வடமொழிக் கலப்பு ஏற்பட்ட பிறகு காணப்படும் பண்பாட்டு நிலைக்கும் இடையிலே தலை கீழ் வேறுபாடு காணப்படுகிறது. சங்க இலக்கிய நடை குதிக்கவில்லை, கூத்தாடவில்லை. வசனத்தைச் செட்டாக்கி வடித்தது போலிருக்கிறது. ஆனால் அதிலே காணப்படும் பண்பாடு அண்ணனுக்கும் தம்பிக்கும் சமாதானம் செய்து வைக்கிறது.

களி றெறிந்து
பட்டனனென்னும் உவகை
ஈன்ற ஞான்றினும்
பெரிதே கண்ணீர்
வான்பெறத் தூங்கிய
சிதரினும் பலவே

—என்று சாவுக்கு சந்தோஷ கீதம் பாடுகிறது. பெற்றபோதிருந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பெரு மகிழ்ச்சியடைவதைக் கூறுகிறது. கலாச்சாரக் கலப்புக்குப் பின் வந்த கம்பராமாயணம் மறைந்திருந்து

தேவநாகரி லிபியையே திராவிடமொழிகளில் லிபியாக்க முயற்சி!

நேற்று-இன்று-நாளை' என்று தலைப்புத் தந்தேன்.

எந்த ஒரு பிரச்சனையையும் ஆராய இந்த மூன்று படிகள் மிகவும் பயன்படும் என்று கருதியே அறிஞர் அண்ணா அவர்கள் இத்தகு அழகிய தலைப்பினைக் கண்டுபிடித்தார்கள்.

நேற்று - ஆம், கடந்து போன இருபத்தி நான்கு மணி நேரத்தை அல்ல நான் குறிப்பிடுவது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய நேற்று. கல் தோன்றி மண் தோன்றாக் காலம். ஆண்டு இன்னது

தன்மையின் சிறப்பை வெளிப் படுத்தும். இன்றைக்கும் சிலர் சங்க இலக்கியச் சொற்கள்புரியவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள் என்றால் அவர்கள் வாழுகிற காலம் தமிழின் தனித்தன்மை கெடுக்கப்பட்ட பிற்பாடு வந்த காலம். வடமொழிச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் அவர்கள் வாழ்விலேயே அதிகமாகக் கலந்து விட்ட காலம். சங்க இலக்கியச் சொற்கள் சில வழக்கொழிந்தும் சில உருமாற்றப்பட்டும் கெடுக்கப்பட்ட காலம். 'திரு' எல்லாம் 'ஸ்ரீ' ஆன

'அட தம்பி, உன்னோடு பொருதுவோன் வேறு யாருமில்லை. உன் அண்ணன் தான். நீங்களிருவரும் சண்டை போட்டுக் கொண்டு அதில் ஒருவன் தோற்றாலும் உங்கள்குடும்பம் தோற்றதாகத்தான் அர்த்தம். இருவரும் வெற்றி பெறுதல் இயற்கையுமன்று. அதனால் சண்டையை நிறுத்து, உன் போன்ற வீரனுக்கு இந்தப் போர் அழகல்ல.''-என்று சமாதானத் தூது போகிறது தாளம் போடாத தனித் தன்மை மிக்க தமிழ்ப் பண்பாட்டுக் காவியம். ஆனால் அதற்குப் பிற்பட்டு, நேற்று

தாக்கிய பேடிமைக்கு புகழ்மாலை சூட்டுகிறது. தாசி என்று முத்திரை போடப்பட்ட மாதவி, ஒருவனையே நினைந்து, அவன் கரத்தையே பற்றி அவனுடனேயே வாழ்ந்து அவன் இறந்ததும் துறவு பூண்டாள் என்கிறது பழந்தமிழ்க் காப்பியம். குலமாது என்று முத்திரை போடப்பட்ட பாஞ்சாலி, ஐவர் கரம்பற்றி ஆறுவது ஒருவனை நினைந்து அதுவும் போதாதென்று ஆடவர் எவரைக் கண்டாலும் அலமந்து நின்றாள் என்கிறது மகாபாரதம். சங்க இலக்கியத்தைக் காட்டிலும் இராமகாதையும் மற்

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கண்ணதாசன் பேச்சு

என்று வரையறுத்துச் சொல்ல முடியாத காலம். அதுதான் அழகு தமிழ் மொழி பிறந்த காலம். இந்திய உப கண்டத்திலே இன்று காணப்படும் பல மொழிகளிலும் பிறந்த காலத்தை வரை யறுக்க முடியா மொழிகள் இரண்டுதான். ஒன்று, கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல் தேய்ந்து தேய்ந்து செத்துப் போன வடமொழி. மற்றொன்று, வயதேற ஏற பொலிவேறி நின்று, வந்த பகை

காலம். அதனால்தான் நேற்று பலருக்கும் புரிந்த சொற்கள் இன்று புரியாமல் காட்சியளிக்கின்றன.

எப்போது தமிழை வேற்று மொழிகள் ஊடுருவ ஆரம்பித்தனவோ அப்பொழுதே அந்த மொழிகளுக்கு உடன்பாடான கலாச்சாரமும்முதன் மொழியின் கலாச்சாரத்தை ஊடுருவ ஆரம்பித்தன. இயற்கையும் இதுதான். காரணம், ஒவ்வொரு மொழியின் தன்மையும் அவ்வவற்றின் கலாச்சாரத்தோடுதான் இயங்கு

எண்ணூறு ஆண்டுகட்கு முன்-வடமொழி நாகரீகத்தோடும் தாளத்தோடும் குதித்துக்கொண்டு பிறந்த இராம காதை அண்ணன் தம்பி சண்டையிலே ஒருவன் புகுந்து ஒருவனை இழுத்துக்கொண்டு மற்றொருவனைக் கொன்றதாக வெளிச்சம் போடுகிறது. சங்க இலக்கியம்

மீனுண் கொக்கின்
தூவி யன்ன
வானரைக் கூந்தன்
முதியோள் சிறுவன்

றைய வடமொழிக் கலாச்சார நூல்களும் தமிழர் மனதில் பெரும் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன என்றால் அதற்குக் காரணம் முதலில் ஏற்பட்ட மொழி ஆதிக்கம் தான். வடமொழி நமது உயர்ந்த மொழியையும் சிதைத்து, உன்னதப் பண்பாட்டையும் உருக்குலைத்து இழிந்த கதைகளுக்கு தெய்வீக முத்திரை குத்தி நமது நெறியையே திசை மாற்றிக்கொண்டு சென்று

(9-ம் பக்கம்)

★ ★ பந்தாடும் பாவையர் ★ ★

★ ★ ★

தமிழருடைய நாகரீகமும், கலாச்சாரமும் உயிர் பெற்று நின்ற சங்க காலத்தில், தமிழ்ப் பெண்கள்பந்தாடிமகிழ்ந்தஇன்பக் கதைகளை இங்கேநினைவுப்படுத்துகிறார் தோழர் வலம்புரி எழிலன். இந்து மதம் இந்த நாட்டில் நுழைந்த பிறகுதான், வயதுவந்த பெண்கள் வீட்டுக்குள்ளேயே சிறையிருக்கும் பழக்கம் ஏற்பட்டது என்பதும் அதற்கு முந்திய காலத்தில் தமிழ்ப் பெண்கள் ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கிறார்கள் என்பதும் இந்தக் கட்டுரை மூலம் தெளிவாகிறது.

★ ★ ★

பழங்கால இலக்கியங்கள் கற்போர்க்கு இன்பம் பயப்பதற்காக மட்டும் அமைந்தனவல்ல. சிலர் அவ்விலக்கியங்களைக் கற்று அவற்றிலே நிறைந்து கிடக்கும் இன்பச் சுவையை மட்டும் பருகி ஆனந்திப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு இன்பத்தை மட்டும் கொள்ளுவதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. நல்ல இலக்கியத்தின் நோக்கம் இன்பம் பயப்பதோடல்லாது மக்கள் வாழ்க்கைக்கும் பயன்பட வேண்டும்.

நம் தமிழ் இலக்கியங்கள் மூளை கொண்டு கற்பதற்காக இயற்றப்பட்டன அல்ல. அவற்றை இதயங்கொண்டு கற்கவேண்டும். ஏனென்றால், அவை தமிழரின் இலக்கியச் செல்வங்களாக மட்டுமல்லாது வரலாற்றுச் செல்வங்களாகவும் அமைந்திருக்கின்றன. பழங்காலத்தில் நிகழ்ந்து வந்த எத்தனையோ பழக்க வழக்கங்கள் தற்காலத்தில் அற்றொழிந்து போயின. இன்னும் சில தலைகீழாக மாறியும் சில குறைபட்டும் காணப்படுகின்றன. உதாரணமாக பழங்காலத்தில் தான் காதலித்த பெண்ணை மனைவியாகப் பெறுதற்காக அது கைகூடாத நிலையில் மடலேறும் பழக்கத்தை காதலன் கையாண்டான என்பது இலக்கியங்களிலிருந்து நமக்கு தெரியவருகிறது. ஆனால் இக்காலத்து, மடலேறும் பழக்கம் உண்டோ எனின் இல்லை. ஏனென்றால் காதலிக்கும் நிலை இக்காலத்து இளைஞர்களுக்கும் கன்னியர்களுக்கும் கிடையாது. அவ்வாறு காதலித்தாலும் அஃது நிறைவேறுவதில்லை. மேலும் அவர் ஒழுக்கம் இழுக்குடைத்தாகக் கருதப்படுகிறது. எனவே, மடலேறும் பழக்கமும் ஒழிந்துபோயிற்று. அதுபோலவே பெண்டிர் பந்தாடும் பழக்கமும் தற்போது தமிழகத்திலில்லை. யாராவது ஒரு தமிழ் மகனிடம் பெண்டிர் பந்தாடினர் என்று சொன்னால் அவர் நம்மைப் பார்த்துக் கேலி செய்வதோடு மட்டுமல்லாது நம்மை பைத்தியக்காரனாக்கவும் முனைகிறார். அதற்குக் காரணம் அவருக்கு இலக்கிய அறிவும் பழங்கால மக்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளும் அறியாமையே ஆகும்.

பெண்டிர், வீட்டு வேலைகளைச் செய்து உடம்பை வலுப்படுத்திக் கொண்டதோடமையாது பந்தாடியும் உடம்பை வலுப்பெறச் செய்தனர். பெண்டிர் மெல்லியலாரன்றோ? அவர்தம் மென்மை நீங்கி வன்மை பெறுவதோ எனின் அற்றன்று மென்மை நீங்காது நீடித்து நிற்றலாம் என்க.

பெண்டிர் பந்தாடிய திறத்தை பெருங்கதையில் "பந்தடி கண்டது" என்ற ஒரு பகுதி முழுவதும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. இராசனை, காஞ்சனமாலை, அயிராபதி, விச்சுவலேகை, மானனீகை போன்ற பெண்டிர் பலருடைய திறமைகளை அறிந்து நாம் வியக்கவேண்டியிருக்கிறது. இராசனை காலாலும் கையாலும் பந்தை அடித்தாளாம். பின்பு காஞ்சனமாலை ஓர் பந்தை அடித்து வான வெளியில் போக்கி மற்றொரு பந்தால் அப்பந்தை பின்னும் அடித்தாளாம். இவ்வாறு ஆயிரத்து நூறு கை அடித்தாள். அயிராபதி என்பாள் அவளைக் காட்டிலும் திறமையுடையவளாக இருந்திருக்கிறாள். அவள் அகங்கையாலும் புறங்கையாலும், ஒரே காலத்தில் மலர் முடித்தும் நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டும் இரண்டாயிரங்கை அடித்தாளாம். விச்சுவலேகை என்பாள் ஒரு கோலால் அடித்து பந்து விளையாண்டாளாம். மானகை என்பாள் எல்லோரினும் திறம்பட பந்தாடினாள் என்று பெருங்கதை விளக்குகின்றது. பந்தாடும் பழக்கம் பெண்களுக்கே உரியதாக இருந்திருக்கிறது அக்காலத்தில். ஆனால் தற்காலத்தில்?

பெண்கள் பந்தாடும் பொழுது பாடிக்கொண்டே விளையாடினர். அப்போது பாடும் பாட்டுக்களுக்குப் பெயர்தான் கந்துகவரி. சிலப்பதிகாரத்தில் அரசனை வாழ்த்தி பெண்கள் பந்தாடியதாக வரும் பாடல்கள் மிக்க சிறப்புடையன. சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில் வரும் பாடல்கள முழுதுமே படித்து இன்புறுவதற்கு ஏற்றன. அவற்றில் அம்மானை வரி, கந்துகவரி, ஊசல் வரி, வள்ளைப் பாட்டு முதலியன மிகவும் இனிமையாய் இளங்கோவின் திறத்தை விளக்கி நிற்கின்றன. இதோ கந்துகவரிப் பாடல்களைக் காணுங்கள.

"பொன்னிலங்கு பூங்கொடி
பொலஞ் செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்ப
ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க
என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே;
பின்னுமுன்னும் எங்கணும்
பெயர்ந்து வந்தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி
வியனிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்க
என்று சென்றுபந் தடித்துமே;
தேவரார மார்பன் வாழ்க
என்றுபந் தடித்துமே;
துன்னிவந்து கைத்தலத்
திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்று மந்தரத்
தெழுந்ததில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்க
வென்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க
என்று பந்தடித்துமே;"

இந்தப் பாடல்களைப் படிக்கும்போது நம்மை அறியாமலேயே நமக்கு இன்பம் உண்டாகிறது. உள்ளத்திலே மகிழ்ச்சி துள்ளி எழுகிறது. செந்தமிழின் இனிமையும் பாட்டின் சந்தமும் தோய்ந்து நமக்கு இன்பத்தை வாரி வழங்குகிறது.

சற்றேறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த குற்றாலக் குறவஞ்சி ஆசிரியராகிய திரிகூட ராசப்பக்கவிராயர் குறவஞ்சியை மிக்க சுவையுள்ள இலக்கியமாக நமக்கு வடித்துத் தந்துள்ளார். குறவஞ்சியில் குற்றாலத்தின் எழிலைக் காணலாம். பாய்த்தோடி வரும் அருவிகளின் ஒலியைக் கேட்கலாம், எங்கணும் பசுமையாய் கண்ணுக்கும் மனதுக்கும் மகிழ்ச்சியூட்டி அமைதி தரும் அழகைக் காணலாம். பூம்புனலின் இன்னிசையும் வண்டின் ரீங்கார ஒலியும் கவிராயருடைய பாடலிலே மிகுந்து சுவைதரும். அவரது கவிதையும் அதிற் தவழும் இனிமையையும் இதோ காணுங்கள்.

செங்கையில் வண்டு கலின்
கலினென்று
செயஞ் செயமென்றுட,-இடை
சங்கதமென்று சிலம்பு புலம்பொடு
தண்டை கலந்தாட,-இரு
கொங்கை கொடும்பகை வென்றன
மென்று
குழைந்து குழைந்தாட,-மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றனளே.

★

பொங்கு கனங்குழை மண்டிய
கெண்டை
புரண்டு புரண்டாடக்-குழல்
மங்குலில் வண்டு கலைந்தது கண்டு
மதன்சிலை வண்டோட-இனி
இங்கிது கொண்டுல தென்படும்
என்படும்
என்றிடை திண்டாட-மலர்ப்
பங்கய மங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றனளே.

★

சூடகமுன் கையில் வால்வளை
கண்டிரு
தோள்வளை நின்றுடப்-புனை
பாடகமுஞ்சிறு பாதமும் அங்கொரு
பாவனை கொண்டாட-நய
நாடகம் ஆடிய தோகை மயிலென
நன்னகர் வீதியிலே-அணி
ஆடகவல்லி வசந்த ஒய்யாரி
அடர்ந்து பந்தாடினளே.

மூத்தோர் மொழி

கீதையிலுள்ள ஒரு சுலோகத்திற்கு நூற்றுக் கணக்கான அர்த்தங்கள் கண்டு பிடிக்கத் தலைமுறை தலைமுறையாக முயன்று வருகிற நம்முடைய புத்திசாலித் தனத்திற்கு சமூகத்திலுள்ள தாழ்ந்த வகுப்பினர் நூற்றாண்டுக் கணக்காக எப்படி வாழ்ந்து வருகிறார்கள் என்பதை ஆராய வேண்டுமென்ற அவசியம் தோன்றவில்லை.

— காண்டேகர்

குறவஞ்சி ஆசிரியரின் உள்ளத்தரங்கிலே வசந்தவல்லி எவ்விதம் பந்தாடியிருக்கின்றாள் என்பதைக் காணுங்கள். இளங்கோவின் வரிகளைக் காட்டிலும் கவிராயரின் வரிகள் சிறப்புடையன என்று தோன்றுகிறதல்லவா?

வசந்தவல்லியின் பந்தாட்டக் கற்பனையும் அதனை விளக்கவந்த பாட்டும் அவரது புலமையை நன்கு தெளிவுபடுத்துகின்றன. இத்தகைய புலமை வாய்ந்த தமிழ்ச் செல்வர்கள் மலியும் நாள் எந்நாளோ?

வசந்தவல்லியும் தோழியும் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். வசந்தவல்லி ஓர் பந்தை எடுத்து மேலே எறிந்து விளையாடத் தொடங்குகிறாள். அப்போது வளைகுலுங்கும் அவள் கரங்கள 'கலின கலின்' என்று இசையை எழுப்புகின்றன. பந்து முன்னும் பின்னும் போய் வருதலின், அவளும் முன்னும் பின்னும் போய்வர வேண்டியிருக்கிறது. அப்போது காற்றண்டைகளும, பாதச்சிலம்புகளும இசைக் கருவிகள்போல இனிய ஒலிகளை ஒலிக்கின்றன. அவளது கெண்டை விழிகள் பந்து நோக்குதலின் அங்குமிங்கும் புரண்டு புரண்டாடுகின்றன. காதிலே விளங்கும் கனங்குழை பளிச்சுப் பளிச்சென மின்னுகிறது. நெய் நீவிய கூந்தல் அவிழ்ந்து இடையினும் கீழே வீழ்கிறது. அனிச்சப்பூக்கால் களையாது பெய்த காரணத்தால் இடை ஒடிந்துவிடுமோ என்று புலவர் பெருமான அஞ்சினாரே, அத்தகைய தொடி இடையின் திண்டாட்டம் நம்மை அனுதாபத்துக்குள்ளாக்குகிறது. கார் கூட்டம் கண்டு ஆடுகின்ற மயில்போல வசந்தவல்லி ஆடுகின்றாள், அவளது பாதமும் கரங்களும் கண்களும மனமும் ஒன்றை ஒன்று முந்தி அவளது பந்தாட்டத்தை நமக்கு நாட்டியமாக்கிக் காட்டுகின்றது.

இவ்வாறு தேன்தமிழ் இலக்கியத்தின் தீஞ்சுவைக் கவிதைகளை ஒரு நண்பர் கேட்டுக் கொண்டிருந்தார். தமிழிலே பேரார்வம் கொண்டவர் அவர். வரலாறுகளைக் கற்பதிலும் கேட்பதிலும் இன்பமுடையவர் அவர்:

மஞ்சுசூழ் சோலையும் மாலை
வேளையும்
அஞ்சனம் தீட்டிய மாதர்
விழிகளும்
பந்துடன் ஆடிடும் பாவையின்
கரங்களும்
வந்தென்னை மயக்கி வருத்தம்
தருகுதே!

என்று பாடிப் புலம்பிக்கொண்டிருக்கிறார்!

வெளி வந்துவிட்டது!

ஆசிரியர்: திரு. முக. கௌசிகன்

தரும் முற்போக்குப் படைப்பு!

"திருந்தியவன்" (சமூக நாடகம்)

படிக்கலாம்! ரசிக்கலாம்! நடிக்கலாம்!

நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் மதிப்புரையுடனும், ஏற்ற நல்ல பாடல்களுடனும் -விலை 0-12-0

விற்பனையாளர்களுக்கு 25 சதவிகிதக் கழிவு உண்டு. முன் பணம் அனுப்புவோருக்கே பிரதிகள் அனுப்பப்படும.

— விபரங்களுக்கு —

திரு. முக. கௌசிகன்

13, முதற்சாலை, சக்ரியா காலனி,
கோடம்பாக்கம், சென்னை-24.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தைஎன்(து) உள்ளம் என்றல்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 2 | 29—10—55 | இதழ் 20

அந்தச் சிலை!

தமிழருடைய கலாச்சாரத்தைப் புகழ்ந்து தரணியே பண்பாடுகிறது என்று பெருமைப்படுகிறேம். திராவிடத்தின் வரலாற்றுச் சிறப்பு குறித்து வேற்று மொழி அறிஞர்களும் தத்தமது நாடுகளில் சொல்லாற்றுவதாக செய்தித்தாள்களிலே பார்த்து பூரிப்படைகிறேம். இன்று நமது தாயகம் அடிமைப்பட்டிருக்கும் நிலையை எண்ணி நாம் கவலையுறும் நேரத்திலேகூட நமது கடந்த காலச் சிறப்பு நமக்கு நல்ல நம்பிக்கையூட்டத்தான் செய்கிறது. ஆனால், அழிக்க வொண்ணுத அந்தச் சிறப்புக்கு களங்கம் பூசும் வகையில் சிக்காகோவில் தமிழர்களைக் குறித்து ஒரு தவருன விளக்கம் அமைத்திருப்பதாக ஆதாரப் பூர்வமான செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. சிக்காகோவிலுள்ள இயற்கை வரலாற்றுக் காட்சிக் கூடத்தில், தமிழர் ஒருவர் கள் இறக்கப் பனையேறும் காட்சியை வெண்கலத்தில் சிலை வடித்து வைத்திருக்கிறர்கள் என்ற செய்தியும், அதன் புகைப்படமும் 'தமிழ்நாடு' முதலிய பத்திரிகைகளில் வெளி வந்திருக்கின்றன. இந்தத் தகவல் கேட்டு, தமிழர்கள் அத்தனை பேருடைய இதயங்களும் புண்படத்தான் செய்கின்றன. தமிழர்கள், வெள்ளையருடன் நீக்ரோக்கள் சேர்ந்த கலவையாம்! கறும்பழுப்பு நிறமுடையவர்களாம்! இவ்வாறு அந்தச் சிலைக்குப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்! இது நம் வேதனையை அதிகப்படுத்துகிறது; துக்கத்தின் எடையைக் கூட்டிக் காட்டுகிறது. உலகத்தின் மற்ற பகுதிகளில் இருந்தவர்கள் காட்டு விலங்குகளோடு உழன்றுகொண்டிருந்த காலத்தில், முதன் முதலாக 'மானம்' என்பதை உணர்ந்து ஆடை அணிகலன் பூட்டி அகிலத்தாரின் கௌரவத்தைப் பெற்ற தமிழர் சமுதாயத்தை இவ்வாறு கேவலப்படுத்தும் வகையில் சிக்காகோவில் வைக்கப்பட்டிருக்கும் சிலை, பைத்தியக்காரத்தனத்தின் பிரதிபலிப்பேயன்றி, வேண்டுமென்றே நம்மை அவமானப்படுத்த வைக்கப்பட்டதாக இருக்காதென்றே நாம் கருதுகிறேம். நாகரீகத்தின் அரிச்சுவடியே அறியாமல் லண்டன் நகரத்து வாய்க்கால் ஓரங்களில் வெள்ளைருடனேயே சுற்றிக்கொண்டிருந்த அமெரிக்கர்களுக்கு தமிழர்கள்தான் நாகரீகத்திற்கு வழிகாட்டினர்கள் என்பதை அவர்களே பன்முறை ஒப்புக்கொண்டிருக்கும்போது சிக்காகோவில் இப்படி ஒருசிலையை அவர்கள் நிறுவியிருப்பார்களா? மானம் காக்க வேண்டி வெள்ளையரை விட்டுப் பிரிந்துவந்த அந்த அமெரிக்கர்களே, பிறநாட்டின்மீது இப்படி ஒரு வீண்பழியைச் சுமத்துவார்களா? என்கின்ற கேள்விகள் நம் நெஞ்சத்தில் எழுவதால்தான் அந்தச் சிலை அறியாமையின் விளைவு என்று நாம் முடிவு கட்டுகிறேம், இந்தச் சம்பவம் குறித்து தமிழ்நாட்டின் முற்போக்குப் பத்திரிகைகள் அத்தனையும் ஏகோபித்த எண்ணத்தைத் தீட்டியிருக்கின்றன. சென்னைத் தமிழ்க்கலை மன்றச் செயலாளர்கள் டாக்டர் மு. வரதராசனர், திரு. மா. வ. பாண்டியன் இருவரும் விடுத்திருக்கும் அறிக்கையில்கூட இதை அறியாமையின் பாற்பட்ட தவருன கருத்து என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த அவமானச் சின்னத்தை நீக்குவதற்கான உடனடி நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று துரிதப்படுத்தியிருக்கிறர்கள். வரலாற்றின் பொன் முகப்பில் இருந்து ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் தமிழருடைய சிறப்பு அழிந்து படுவதற்குக் காரணம் ஆரியப் பற்றுடையவர்கள் சரித்திரத்தைக் குழப்பிவிட்டிருப்பதுதான் என்று செயலாளர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது இதயப்பூர்வமாக வரவேற்கத் தக்கதாகும். இரண்டு திங்கள்களுக்குமுன்பு மதுரை தியாகராசர் கல்லூரியில் 'உலக வரலாற்றில் நாம்' என்ற தலைப்பில் பேசிய அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டதுபோலவே சென்னை தமிழ்க் கலைமன்றச் செயலாளர்களும், 'ஆராய்ச்சித் துறையில் தமிழ்த்தலைவர்கள் நுழைந்து தமிழக வரலாற்றை எழுதவேண்டும்' என்று பொருள்படக் கூறியிருக்கிறர்கள். அதிகாரத் தோரணையில் 'இமயமுதல் குமரிவரை இந்தியா ஒன்றே' என்று பேசும் காங்கிரஸ் ஆளவந்தாரும் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழகத்தின் உண்மையான வரலாற்றை உலகத்திற்கு எடுத்துரைப்பதோடு, சிக்காகோவில் வைக்கபபட்டிருக்கும் சிலையையும் அகற்றுவதற்கும் சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டும். அமெரிக்க நாட்டு டாலர் ஒளியிலேதான் இந்தியா, அகிலத்தின் கண்களுக்குத் தென்படுகிறது என்பதாக வடவர் வேண்டுமானல் கருதிக்கொண்டு அடங்கிக் கிடக்கட்டும். தமிழர்களுக்கு மானம் உயிர்ப்பிரச்சனை. ஆகவே சர்க்கார் இதில் உடனடியாகக் கவனம் செலுத்தியாக வேண்டும், சிக்காகோ வெண்கலச்சிலை, தனிப்பட்ட ஒரு கட்சிக்காரரை மட்டுமல்ல, தமிழர்கள் அனைவரையுமே வேதனைக்குள்ளாக்கியிருக்கிறது என்பதை அரசியலார் தெரிந்துகொள்ளவேண்டும். மக்கள் தரும் வரி பணத்தில், தாங்கள் இருக்கும் நாட்டிற்கேற்ப உடை உடுத்தி உல்லாசிகளாகத் திரியும் காங்கிரஸ் சர்க்காரின் தூதுவர்கள் இந்த உருப்படியான காரியத்தையாவது அங்கிருந்து செய்துமுடிக்கட்டும். அந்த வெண்கலச்சிலை அகற்றப்படவேண்டும்; வெந்த புண்ணில் சொருகப்பட்டிருக்கும் வேல் பிடுங்கப்படவேண்டும்.

ஆசிரியத் தோழருக்கு

-இராசன்-

'தென்றல்' ஆசிரியர் அவர்களுக்கு,
வணக்கம்.

சென்னையில் இருந்து வெளிவரும் திங்கள் ஏடான மலர் அக்டோபர் வெளியீட்டிலும், கடந்த ஞாயிறு தமிழ்நாடு தினசரிப் பத்திரிகையிலும் ஒரு செய்தி கண்டேன். திடுக்கிட்டேன். வந்தவர்களுக்கெல்லாம் வரையாது வழங்கி, வானளாவிய புகழ்பெற்ற வண்டமிழ் நாட்டவரைப் பழித்துக் கூறும் செய்திதான். மடிந்த கொள்கையெல்லாம் ஒழித்து மறுமலர்ச்சி தேடுகின்ற நாம், சிதைந்த கருத்துக்களையெல்லாம் சீர் திருத்த முனைந்து இருக்கும் நாம், உலக வரலாற்று ஏட்டிலே பண்பின் சிகரமாக வாழப் பாடுபடும் நாம்--அந்நிய நாட்டவரால் அவமானப்படுத்தப் பட்டுள்ளோம்.

அமெரிக்கா சென்றுள்ள எஞ்சினியர் ஒருவர், ஒரு படத்தை வருத்தத்தோடு அனுப்பியுள்ளதாகஅந்த ஏடுகள் கூறுகின்றன. அங்கு "சிகாகோ இயற்கை வரலாற்றுக் காட்சிக்கூடத்தில் சாண்கே மெமோரியல் ஹாலில்," தமிழர் ஒருவர், கள் இறக்கப் பனைமரமேறும் காட்சியை வெண்கலத்தில் சிலை வடித்துப் பார்வைக்கு வைத்துள்ளார்களாம். அச்சிலையை அப்படியே புகைப்படம் எடுத்து வேண்டுவோருக்குத் தருகிறார்களாம். அப்படத்தைத்தான் அந்த எஞ்சினியர் அனுப்பியுள்ளாராம். அந்தச் சிற்பத்தின் அடியில் கீழ்க்கண்ட விளக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள் அயல்நாட்டவர்.

CHICAGO NATURAL HISTORY MUSEUM

Formerly field Museum of Natural history

"TAMIL TREE CLIMBER"

Sculpture in bronze by Malvina Hoffman

Chauncey Keep Memorial Hall (3).

The Tamils are a mixture of White and Negro stocks and have dark-brown skin and wavy hair. They climb toddy palms to obtain sap for making Wine.

இப்படி ஆங்கிலத்தில் அந்தச் சிற்பத்தின் அடியில் விளக்கம் குறிப்பிட்டிருக்கிறர்கள்.

அதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் மரமேறி"

மால்விஞ ஆப்மான் என்பவரால் செய்யப்பட்ட வெண்கலச் சிலை, "சான்ஸி கீப் மெமோரியல் மண்டபம்" (3).

தமிழர்கள், வெள்ளையர்களுடன் நீக்ரோக்கள் சேர்ந்த கலவை. கறும்பழுப்பு நிறமுடையவர்கள். அலை அலையான முடியுடையவர்கள். அவர்கள் பனைமரங்களிலேறி அதன் சாற்றைக் கொண்டு கள் தயார் செய்கின்றனர். (இதுதான் தமிழ் மொழிபெயர்ப்பு)

ஐயோ! நமக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தை அகற்றுவது யார்? பண்பட்ட வாழ்வு நடத்திய நாம் புண்படும் செய்தி அல்லவா? அறியாமையால் அவர்கள் செய்தார்களா? அப்படி அறியாமை என்றல் அதே வரலாற்றுக் கூடத்தில் "தாஜ்மஹாலை" சிற்பமாக செதுக்கிச் சரியான வரலாறு எழுதப்பட்டிருந்தன என்றும் அந்த எஞ்சினியர் செய்தி அனுப்புவாரா?

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்குமுன்பு, வெள்ளையர்கள் தேம்ஸ் நதியில் மீன்பிடித்து வாழ்க்கை நடத்தும் முன்பு நாம் வாழ்ந்திருக்கிறேம். மத்திய ஆசியாவின் மூலம் ஆரியர் குடியேறும் முன்பும் நாம் 'தமிழர்கள்' வாழ்ந்திருக்கிறேம். வெள்ளையருக்கும், நீக்ரோவுக்கும், நமக்கும் என்ன சம்பந்தம். இருவர் சேர்க்கையினுல் நாம் தோன்றினேமாம். வேதனை தருகிறது. உள்ளமோ எரிமலையாகிறது. கற்பு, கற்பு என்று கதறி மேனுட்டவருக்கு கற்பு என்றல் என்ன என்று இலக்கணம் கற்றுக்கொடுத்த நம் இனம் "கலப்பாம்"! பொருந்துமா இந்த வரலாறு?

தென்பாண்டியக் கடலோரத்தில் விளைந்த முத்துக்களை எகிப்து, ரோம் முதலிய நாடுகளுக்கு அனுப்பி நாகரிகத்தைப் பரப்பியவர் நாம். சாவகம், புட்பகம், யவனம், சீனம் முதலியவற்றிற்கு கடல் கடந்து சென்றேம். கடாரம் வென்றேம். கங்கைக் கரை வேந்தர்கள் கனகனும், விஜயனும் தமிழர் வீரத்தைப் பழித்தனர்; புலியெனச் சீறி குயிலாலுவத்தில் புல்லர்களைப் பணியவைத்து கல் தூக்கச்சொல்லி இமயத்தின் எல்லையைக் கண்டான் சேரன் செங்குட்டுவன். அவனைச் சேர்ந்த நாம், பாண்டியன் பரம்பரையினராகிய நாம், சோழன் சொந்தக்காரராகிய நாம் அந்நிய

(9-ம் பக்கம்)

கண்ணதாசன் இலங்கைப் பயணம்

7-11-55ம் தேதி திங்கள் காலை 10-மணி விமானத்தில் ஆசிரியர்கண்ணதாசன்இலங்கை புறப்படுகிறர். சுமார் இருபது தினங்கள் இலங்கையில் தங்கி பல விழாக்களில் கலந்துகோள்வார்.

வெண்பாப் போட்டி 19.

◉

'கலை' என்று எடுத்து 'தலை' என்று முடிக்கவும்.

முடிவு தேதி 5-11-55

வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6.

உலகத்தின் பெருங்கதையே இதுதானம்மா!

பனித்துளி

விடியற் காலம். வானம் மெல்ல வெளுத்துக்கொண்டு வந்தது. இருட்டு மறைந்துபோய் வெள்ளொளி பரவியது. குளிர்ந்த காற்று இலேசாகத் தவழ்ந்தது.

குளிர்ந்த காற்று முகத்தில் பட்டதும், கட்டில் மேல் படுத்திருந்த அவள் புரண்டு படுத்தாள். ஜன்னல் வழியே வந்த மெல்லிய தென்றல் அவள் முகத்தில் பட்டு, விழிப்பை உண்டாக்கிற்று. மெல்ல இமைகளைத் திறந்தாள். அவள் கண்கள் இளஞ் சிவப்பாக உருவெடுத்திருந்தன.

புரண்டு படுத்த அவளுடைய கண்களில் ஒரு 'வேனிற் கால இரவின் கனவு'' என்ற புத்தகம் பட்டது. அதை வெறுப்போடு உற்றுப் பார்த்தாள். இரவு படிப்பதற்காகத் திறந்த புத்தகம்......அப்படியே திறந்து கிடந்தது.

புத்தகத்தைப் பார்த்தபடியே கட்டிலை விட்டு இறங்கினாள். தள்ளாடி நடந்தாள், ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு, வெளுத்துக்கொண்டுவரும் நீலவானத்தைப் பார்த்தாள். நீலவானத்தோடுகோஞ்சும் மேகக் கூட்டத்தைக் கண்டு ரசித்தாள். ஆனந்தமாகப் பறந்து திரியும் பறவைக் கூட்டத்தைப் பார்த்தாள். வானத்திலே மிதந்து வந்த அவள் பார்வை கீழே வந்தது மாடி ஜன்னலைத் தொட்டுக் கொண்டிருந்த மரக் கிளையைப் பார்த்தாள். அந்த மரக்கிளையின் இலை நுனி ஒன்றில், ஒரு அழகான பனித் துளி. கள்ளங்கபடமற்ற மனித இதயத்தைப் பிரதிபலிப்பது மாதிரி இருந்தது அந்தப்பனித்துளி. நல்லதொரு முத்தை யாரோ அந்த இலை நுனியில் கட்டி விட்டார்களோ என்று எண்ணத்தோன்றியது அந்தப் பனித் துளியைப் பார்க்கும் போது, அவளுக்கு......

அந்தப் பனித்துளியைப் பார்க்கும்போது ஏனோ அவளுக்குப் பழைய நினைவுகள் வந்தன. அந்த நினைவுகளின் பிடியிலிருந்து அவளால் தப்ப முடியவில்லை. நினைவோடு நினைவாக நெஞ்சத்தை அலையவிட்டு சிலை போல நின்றாள். நினைவு மட்டும் நிற்கவில்லை.

பழைய நினைவுகளில் படிந்து போன நெஞ்சோடு தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டாள். அவளுக்கு ஒரே ஆச்சரியம்! அதே பச்சை நிறப்பட்டுப் புடவைதான் உடுத்தி இருந்தாள். அதே வெண்ணிறமான ரவிக்கையே அவள்கண்ணில் பட்டது.அந்தக் குறு குறுப்பும் தெம்பும் நெஞ்சில் நிழலாடின. கண்ணாடிப் பக்கம் பார்வை திரும்பியது......முதல் நாள் மாலை இட்டுக் கொண்ட சிகப்புப் பொட்டை சரி செய்து கொண்டாள். அலைந்து கொண்டிருந்த தலை மயிரை கைவிரலால் கோதிவிட்டுக் கொண்டாள்.

வானம் மெல்ல வெளுக்கத் தொடங்கியது. இருட்டு பூரணமாக மறைந்து போய் மனதில் புதுமையான இனிமை தோன்ற ஆரம்பித்தது. நீல வானத்திலே உள்ள நிம்மதி, தன் நெஞ்சிலே மட்டும் இல்லை என்று அவள் நினைத்தாள். எண்ணத்தோடு எண்ணமாகப் பின்னி விட்டானே, என்ன செய்வது என்று தவித்தாள்.

ஜன்னலுக்கு வெளியே இருந்த பனித் துளியைப் பார்த்தாள். இளஞ் சூரியனின் மென் கதிர் பட்டு மின்னியது. இப்படித் தான் மின்னுகிறான் அவனும் அவள் உள்ளத்தில்! கதிர் பட்டு மின்னும்போது பல வண்ணம் காட்சி தருவது மாதிரி, நெஞ்சிலே பல எண்ணங்களைத் தூண்டிவிட்டு இன்ப வேதனையை உண்டாக்குகிறான். ஏன் அந்த வேதனையைஅவன் உண்டாக்குகிறான்?

அப்படி என்ன அவன் பிரமாதமான அழகோ? அப்படி யெல்லாம் இல்லை, சாதாரணமான ஆள்தான். அவனை முதன் முதல் பார்த்தபோது சாதாரணமான வெள்ளைச் சட்டை தான் அணிந்திருந்தான். பாதித் தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் போது, தற்செயலாகத் திரும்பிப் பார்த்தாள். மூன்றாவது வரிசையிலிருந்த அவனும் அப்படியே தான் பார்த்தான்!

அவன் பார்வையிலே கவர்ச்சி இருந்தது. அவன் தோற்றத்திலே இன்பம் மிதந்தது. அவன், தன் சிந்தை முழுவதையும் செலுத்தி அவளை ரசித்தான். அவளைப் பார்த்துக் கொண்டே, நாள் முழுதும் இருக்க வேண்டும் என்று நினைத்தாள் நினைவிலே நிலைத்துவிட்ட அவனின் நினைப்போடு தேர்வை எழுதினாள். எழுதிக் கொண்டே அவனைப் பார்த்தாள் அவன் இளஉதடுகளிலே சிறு புன்னகை நெளிந்து ஓடியது! ஆமாம், அவன் ஏன் அவளைப் பார்த்துச் சிரித்தான்? அந்தச் சிரிப்பிலே கேலியும் மின்னிட்டதே ஏன்? நடு ஹாலில்......எல்லாருக்கும் நடுவில் இப்படிப் பார்த்துச் சிரிக்கிறானே! என்று நினைத்தாள். ஏன் சிரித்தான் என்ற நினைவோடு, எழுத்துலகிற்குத் திரும்பினாள். ஆகா! அப்போதுதான் அவன் ஏன் சிரித்தான் என்பது அவளுக்குப் புரிந்தது. விஷயம் இவ்வளவுதான்; அவனைப் பார்த்துக்கொண்டே எழுதிய அவள்,பேனாவை எடுத்து எழுதுவதற்குப் பதிலாக, 'ஸ்கேலை' எடுத்து எழுதிக் கொண்டிருந்தாள். அவளுக்கே வெட்கமாகப் போய் விட்டது. தன்னுடைய தோழியர்கள் யாராவது பார்த்து விட்டார்களா என்று சுற்றிலும் பார்த்தாள், சரோஜாவின் அந்தக் குறும்புச் சிரிப்பு...!

அன்று மாலை சரோஜாவின் ஒவ்வொரு வார்த்தைகளும் அவளைக் கொன்றனவே! அவள் திட்டினாள் என்றாலும் அதிலும் இன்பம் இருக்கத்தான் செய்தது.

மீண்டும் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். பனித்துளி அவள் கண்களில் பட்டது. அவள் இதயத்திலே அவன் தோன்றினான். அவன் சிரிப்புத் தோன்றியது. அந்தச் சிரிப்பிலே இன்பம் இருந்தது. அவனை நினைத்துக் கொண்டிருப்பதிலே ஒரு நிம்மதி இருந்தது.

அவனைப பார்ப்பதிலே ஒரு துடிப்பு; பார்த்துவிட்டால் ஒரு ஆனந்தம்; பார்க்காவிட்டால் ஒரு ஏக்கம்! இது ஏன் என்று எண்ணினாள். அவளுக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? ஏன், அவனைக் காண அவள் துடிக்கின்றாள்? அது அவளுக்கும் தெரியாத புதிரா? எண்ண எண்ண இனிக்கும் அந்த எண்ணத்திற்கு என்னதான் பெயர்? அவளுக்கே புதுமையாக இருந்தது. அவனையே நினைத்து நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்து நினைவோடு நினைவாக நிற்கிறாளே அதற்கு என்ன பெயர்? பாசமா? சே,வெறும் பாசமா அது, என்று எண்ணினாள். உயிர்ப் பாசம், உயிர்ப்பாசம் என்று அவள் உதடுகள் துடித்தன. அவனுடைய பெயரை அவள் உச்சரித்தாள்; உச்சரித்துக்கொண்டே திரும்பினாள்......பனித்துளியைப் பார்த்தாள்.

பனித் துளியிலே இரண்டொரு தூசு படிந்திருந்தது. அவளுடைய நெஞ்சிலே துன்பம் அலைமோதியது. காற்றிலே வந்த தூசுதான் என்றாலும் அவள் மனதிலே அது உறுத்தியது......

அவனை எண்ணி ஏங்குவதிலே யாருக்கு என்ன துன்பம் என்று நினைத்தாள். பனித் துளியிலே தூசு படியாதிருந்தால்...... அவனுக்கு அந்தக் கதி ஏற்படாதிருந்தால்......ஆகா! அந்த வாழ்வுக்கு ஈடு ஏது? இணை ஏது?

அவளால்தான் இந்தத் துன்பம் வந்தது என்று அவன் நினைப்பானா? இருக்காது அவன் நினைக்க மாட்டான்! அப்படி நினைக்க என்ன இருக்கிறது?

அவள் நினைத்தால் அவனுக்கு எதுவும் செய்ய முடியாதா? ஏன் முடியாது? மனம் இருந்தால் மார்க்கத்திற்கு என்ன பஞ்சமா? வழி இல்லையா? வகை தெரியாதா? யார் சொன்னார்கள்? அவள் அவனுக்கு எவ்வளவோ செய்துதான் இருக்கிறாள்: இல்லை என்று மறுக்க யாருக்குண்டு தைரியம்? அவனின் எண்ண அணைப்பில், அவனுடைய பெயரை உச்சரிக்கும் இன்ப லயிப்பில், உயிரோடு உயிராக ஒன்றிப் போய் நின்றிருந்தாள். கீழே இருந்து அவளது தாய், அவள் பெயரைச் சொல்லி அழைத்தாள். இனிக்கும் நெஞ்சோடு இருக்கவும் முடியாதா என்று எண்ணிக் கொண்டே ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு பனித்துளியைப் பார்த்தாள்!

பனித் துளியைக் காணோம்! இலை மட்டும் இருந்தது.

அவ்வளவு தானா வாழ்வு! பனித் துளி தானா வாழ்க்கை!

அவனை அவள் மறந்துவிடவேண்டியது தானா? நீல வானம் நிம்மதியாக இருக்கும்போது, நெஞ்சிலே மட்டும் அலை பாய்கிறதே! அவள் முன்னால் அவன் வரவே மாட்டானா? பனித்துளி மறுபடியும் அவனை அவள் பெயரைச் சொல்லி அவள் தாய் அழைத்தாள். இனி நிற்க இயலாது என்று எண்ணினாள். மான் போலத் துள்ளி, மாடிப்படி இறங்கி ஓடினாள் பனித்துளி மறைந்துவிட்டது. அவள் தன் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்து விட்டாள். நாளை மறுபடியும் பனித்துளி தோன்றும். அவள் அவனை நினைப்பாள்; மகிழ்வாள்; பெருமூச்செறிவாள்: எண்ணத்தோடு எண்ணமாக வாழ்வாள்.

அவளுடைய பெயர் என்னவென்று தானே கேட்கிறீர்கள்? எதுவாக இருந்தால்தான் என்ன? நான்கு எழுத்துக்களைக்கொண்ட ஒரு அழகான, அற்புதமான, ஆனந்தமான பெயர். அவ்வளவு தான். ஏன்? இந்திரா என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்.

—ஜி. நாகராஜன்

◉ ◉◉◉ ◉

திருக்குறள் கட்டுரைப் பரிசு

1. மூன்று பரிசுகள் வழங்கப்பெறும்.

முதற் பரிசு	ரூ. 100
இரண்டாவது பரிசு	ரூ. 50
மூன்றாவது பரிசு	ரூ. 25

2. தமிழறிவும், உலகியலறிவும் வாய்க்கப்பெற்ற தமிழன்பர்கள் குறட்பாக்களை ஆராய்ச்சிக் கண்கொண்டு கற்பதற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு இப்பரிசுத் திட்டம் ஏற்படுத்தப் பெற்றுள்ளது.

3. தமிழ்மொழி வளர்ச்சியில் பற்றுக் கொண்டுள்ள அனைவரும் இப்பரிசுத் திட்டத்தில் பங்குபெற வேண்டுமென்று விழைகின்றோம்.

4. பங்கு பெறுவோர் திருக்குறள் பற்றிய எப்பொருள் பற்றியேனும் கட்டுரைகள் எழுதலாம். கட்டுரைகள் ஆராய்ச்சி அறிவு நிரம்பப் பெற்றதாக இருத்தல் வேண்டும். கட்டுரையாளருக்கே உரிய கருத்துக்கள் கட்டுரையில் இடம்பெறல் வேண்டும்.

5. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள் அனுப்பலாம்.

6. பரிசுக்கென அனுப்பப்படும் கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிடும் உரிமை "திருக்குறள் சிந்தனைக் குழுவினருக்கு" உண்டு.

7. பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் தலைவர், திருக்குறள் சிந்தனைக்குழு, A-7, தில்லைநகர், உறையூர், திருச்சி என்ற முகவரிக்கு எழுதி விண்ணப்பத்தாள், கட்டுரைக்கேற்ற சில தலைப்புகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

8. கட்டுரைகள் 14-1-56 க்குள் அனுப்பப்படல் வேண்டும்.

திருச்சி
15-10-55 } சே. மு. அ. பாலசுப்ரமணியம்
தலைவர், திருக்குறள் சிந்தனைக்குழு.

◉ ◉◉◉ ◉

மோகனசுந்தரம் இவ்வளவு கீர்த்தியும் செல்வாக்கும் பெருவாரென்று தாமரைக்குளம் - சிறு கிராமத்தில் யாரும் நினைக்கவில்லை. "கவலையற்ற" வாழ்வுக்காரர்கள் அவனைக் 'கிறுக்கன்' என்று சொல்லிபிருக்கிருர்கள். அவரையொத்த இளைஞர்கள்கூட இகழ்ந்து பேசி, சோம்பேறி என்று இழித்துரைத்திருக்கிருர்கள். கேவலமான பட்டப் பெயர்கள் காலப்போக்கில் வெற்றி விருதுகளாக மாறிவிடுகின்றன என்பதற்கு மோகனசுந்தரத்தின் வாழ்வு அழியாத,- தேயாத, கல்வெட்டாகும்.

மோகனசுந்தரம் கேவலமாக மதிக்கப்பட்டார். ஆனுல் அவருடைய வாழ்நாளிலேயே, வையகம் அவருடைய இசைக்கச்சேரியை கேட்பதறகு காத்துக்கிடந்த நாட்களையும் சந்தித்துவிட்டுத் தான் செத்தார்.

அழகு இல்லாதவர்; சுகமாக இருந்த காலத்திலே சுந்தரபுருஷனாக வாழ்வதற்கு வசதி பெறறிருந்தும் ஆடம்பரத்தை அறவே வெறுத்தவர்; விஞ்ஞானிகள் கருததுக்கு நேர்விரோதமாக வாயால் மூச்சுவிட்டே உடல் நலத்தைக் கெடுத்துக்கொண்டவர். புகழுக்கேற்ற பொலிவு இல்லாத அந்த சாதாரண உருவத்தைக் கண்டு வசந்தபவனத்து செண்பகவல்லி காதலித்தாள என்றுல், அதிலே ஒரு புதிய தத்துவம் அடங்கி இருக்காமலில்லை. காதல் அழகிலே பிறக்கிறது என்கிருர்கள்; பணத்தில உதிக்கிறது என்கிருர்கள்; இவை இரண்டிலும்தான் காதல் பிறக்கிறதென்றுல், அழகில்லாத மோகனசுந்தரத்தை, வசதிபெற்ற செண்பகவல்லி எப்படி விரும்பியிருக்கமுடியும்? ஆமாம், விரும்பினுள், ஏழைக்கலைஞனை விரும்பினுள்; உறவு என்பதைத் தவிர வேறு எந்த இணைப்பும் எந்த வகையிலும் இல்லாத அந்த நாதசுரப்புலவனை செண்பகம் மனதார விரும்பினுள். திறமையையும் புலமையையும் கண்டு பெண் கொடுக்கும் புத்திசாலிகள்தான் சங்க காலத்தோடு அழிந்து பட்டார்களே - பிறகெப்படி செண்பகம் மோகனசுந்தரத்திற்குக் கிடைப்பாள்?

கொடுமைக்காரர்களால், ஏழைகளின் வாழ்க்கைப் பாதையிலே தூவி விடப்படுகின்ற கொடுமைகள் ஒரு சிலரை அழித்து விடுகின்றன; வேறு சிலரை இனபவாழ்வுக்குவழி தேட வைத்துவிடுகின்றன. மோகனசுந்தரத்தின் வாழ்வைப் பொசுக்க வசந்த பவனத்துக்காரர்கள் செய்த சதிவேலைகள்தான் அவரை ஊரைவிட்டுப் போகச் செய்தாலும், அந்தச் சதிகள்தான் மோகனசுந்தரத்தின் ஒரு இதயத்திலே இலட்சியத்திற்கு வித்தூன்றியதுஎன்றுல் தவறில்லை.

ஊரைவிட்டுப் போகும்போது ஓட்டாண்டியாகப் போனுர். இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு புகழ் பெற்ற வித்வானுக ஊருக்குள் நுழைந்தார். மோகனம் என்ன அப்படிப்பட்ட தவறு செய்துவிட்டார்?"-இது தாமரைக் குளத்து நல்லோரின் அனுதாபம்.

"மோகனம் இவ்வளவு பெரிய வித்வானுக வருவானென்று இரண்டாண்டுகளுக்கு முன்பே தெரிந்திருந்தால அவனேடு ஏன் நான் பகைததுக்கொள்ளப் போகிறேன்! அவனுக்கும் எனக்கும் இடையிலே இவ்வளவு பெரிய சுவர் எழும்பியிருக்குமா? வெண்ணெய் திருடிய கண்ணன் பருவத்திலிருந்து, வேலை தேடும் வாலிபப் பருவம்வரை ஒன்றுகவே ஓடியாடித் திருந்த எங்களுக்குள் பகை பிறந்து, வளர்நது, விரிந்துவிட்டது. இன்று வருந்துகிறேன்-அன்று இதே சக்திவேல்தான் அவனை இகழ்ந்து பேசியதும். துரோகி என்று கேவலமாகத் தூற்றினேன். அன்று அவன் செய்தது தவறு அல்லவென்று இன்றுதான் எனக்குப் படுகிறது. ஆமாம், தவறில்லைதான்.

ஓ ஜனங்களே, எனனை மன்னித்து விடுங்கள். நான் செய்த கொடுமைக்கு இன்றுஎன் குடும்பம் அடைந்துவரும் துயரம் தான் தண்டனை. வையகத்தோரே, பணத்திற்கு எதிரே நீதியும் தர்மமும் எம்மாத்திரம் என்று கருதாதீர்கள். நீதிக்கு எதிரேபணம் அணு அணுவாகச் சாகிறது. எதிரியை ஒரே நொடியில் கொன்றுவிடும் தன்மை இல்லை நீதிக்கு. துயரத்தை உணரச்செய்து பகைவனை மாய்க்கும் சக்தி பெற்றது நீதி. மோகனம் எனது நண்பன். என்னுடைய தங்கையோடு தொடர்பு கொண்டான் என்பதற்காக அவன் முகத்திலேயே விழிக்காதிருந்தேன். குணங்கெட்டவன் - குடி கெடுப்போன் என்றெல்லாம் அவனைப் பற்றிப் பிரச்சாரம் செய்தேன். சொந்த வாழ்வின் தித்திப்பே சபலத்தின்முன் நிற்கமுடியவில்லையென்றுல் சிநேகம் எம்மாத்திரம்? பத்தாண்டு கால நட்பை எப்படியோ முறித்துக்கொண்டேன. முறித்துக்கொண்டதோடு மட்டுமல்ல, மோகனத்தை பரம விரோதியாகவும் கருதிவிட்டேன். மோகனம் செத்துவிட்டான்......பட்டான். ஆனுலும் அவன் புகழ் நிலைத்து நிற்கிறது. அவனைப் புதைத்த அந்த சுடுகாட்டின் வழியாகப் போகும் போதெல்லாம் அவனுடைய நாதசுர இசை கேட்பதுபோன்ற ஒரு உணர்ச்சியும்; 'ஏ சக்திவேல், என் பாவம் உன்னை சும்மா விடாதடா!' என்று மிரட்டுவது போன்ற உணர்ச்சியும் எனக்குப் படுகின்றன.

★

மோகனசுந்தரம் இருக்கிருரோ, அவா தமிழ் மேதினி கண்ட நல்ல இசைக் கலைஞர். அவர் எழுப்பும் இசை கேட்டால், ஓடிவரும்கன்று மருண்டு நிற்கும்; பாயவரும் மாடு நிமிர்ந்து பார்க்கும்; கோத்த வரும பாம்பு மயங்கிச் சாயும்.

★

அவன் குடி இருந்த தெரு இடிந்து கிடக்கிறது. அவன் வாழ்ந்த வீடு நாதியற்றுப்போய் ஊர்சுறறித் திரியும் ஆயலூர் பாதசாரிகளின தங்கு மடமாகப் போய்விட்டது."

-சக்திவேல் தனித்திருக்கும்போதெல்லாம் இவ்வாறு புலம்பிக் கொண்டே இருந்தான.

★

"என்னைக் கேலி செய்தார்கள். முறை கெட்டவன் என்று இடித்துரைத்தார்கள். 'முறை' என்பதற்கே சிலருக்கு இன்னும் பொருள் தெரியவிலலை. செண்பகம் நண்பனின் தங்கையாயிற்றே என்று நான் ஒதுங்கலாம்; அதற்காக செண்பகத்தைக் காதலிப்பது தகாத முறையென்று எப்படிச் சொல்லமுடியும்!

செண்பகம் சக்திவேலின்தங்கை.- ஒரே தங்கை. சிட்டுக்குருவிபோல வீட்டுக்குள் சிறகடித்துத் திரியும் சுட்டிப்பெண் அவள். வாய்த்துடுக்கு மிக அதிகம். எவ்வளவு 'பெரிய மனிதராக' இருந்தாலும் செண்பகத்தின் நாவுக்கு அடக்கம்தான். அதனுல் சக்திவேல் வீட்டில் யாருமே செண்பகத்தோடு பேச்சுக் கொடுப்பதில்லை.

எனக்குக் கொஞ்சம் சங்கீதப் பைத்தியமுண்டு. பிற்காலத்தில் அந்தப் பைத்தியம்தான் எனக்கு புகழைத் தேடித்தந்தது. ஓய்வு நேரத்தில் சக்திவேல் வீட்டு ஒட்டுத் திண்ணையிலிருந்து கொண்டு நான் பாடுவதையெல்லாம் உள்ளே இருந்து செண்பகம் ரசிப்பாள். ஒவ்வொரு நாளைக்கு, சக்திவேல், வீட்டிலில்லாத நேரத்திலும் நான் அங்கே போய்விடுவேன். அப்போதெல்லாம் என் பாட்டை ரசிப்பது செண்பகம் மட்டும்தான்.

★

பாட்டு முடியும். உள்ளிருந்து 'அப்லாஸ்' கிடைக்கும். இப்படிப் பலநாள். சந்திக்காமல், பேசாமல், எங்களிடையே ரகசிய உறவும், உரிமையும் வளர்ந்துவிட்டன. பூவைத்தான் மறைக்கமுடியும்! பூவின் மணத்தையும் மறைத்துவிட முடியுமா? அந்தமணம் சக்திவேலுக்கும் எட்டிவிட்டது.

★

காதல் ஆகாது கூடாது என் போரில் ஒருசிலர் தவிர்க்க முடியாத நேரத்தில் அதைச் சீர்திருத்தமாகக் கொள்கின்றனர். இன்னும் சிலர், சொந்தவீட்டுக்'காதல் நாடகத்தை' மங்களத்திலும் முடிக்கப் பயந்து சோகத்தில் முடிக்கவும் துணிவற்று நிலைமையை விபரீதமாக்கி நாடகத்தை உடைந்த கூமுட்டையாக்கி விடுகிருர்கள். வேறுசிலர், கௌரவத்தைப் பெரிதென்று நினைப்பதாக மனதுக்குள்ளேயே எண்ணிக் கொண்டு தங்கள் வாயாலேயே ரகசியத்தை பகிரங்கமாக்கிவிடுகிருர்கள். சக்திவேல் இதில் மூன்ருும் வகை. எனக்கும் செண்பகத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது என்பது உண்மைதான். உருவெடுத்துவிட்ட அந்த நிலைமையை எவ்வாறு சரிப்படுத்துவது என்பதை சக்திவேல் உணரவில்லை. உண்மையான காரணத்தை காட்டி பலரது ஆதரவு பெற்று என்னைச் சந்தி சிரிக்கவைப்பதிலேயே அவன் முனைந்தானே தவிர, அதனுல் தன் தங்கையின் பெயர் கெடுகிறதே, செய்தி பரவுகிறதே என்பதை அந்த சபலபுத்திக்காரன்தெரிந்துகொள்ளவேயில்லை. ஊர்முழுதும் பறைசாற்றியதுபோல் 'மோகனத்துக்கும் செண்பகத்திற்கும் கூட்டு' என்று அனைவருக்கும் தெரிந்துவிட்டது. 'ஏழைக்குறும்பு பொல்லாதது' என்றோரின் பட்டியல் விரிந்தது. 'மோகனமும் சாமான்யமானவனல்ல, புளியங்கொம்பைத்தான் பற்றி யிருக்கிருன்' என்போரும் கிளம்பினர்.

இரண்டாண்டுகளுக்குப்பின்...

நான் இபபோது ஒரு நாதசுர வித்வான். ஊரைவிட்டுக் கிளம்பி எப்படியோ ஊதக் கற்றுக்கொண்டு விட்டேன். எனது கச்சேரிக்கு பட்டி தொட்டிகளிலிருந்தெல்லாம் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு மக்கள் வர ஆரம்பித்தார்கள். அடித்துத் துரத்திய ஊரில் ஆனந்தமாக வாழத் தொடங்கினேன. செண்பகத்தை என் இதயத்திலிருந்து தூக்கி எறிந்துவிட்டுத்தான் ஊரைவிட்டுக் கிளம்பினேன. தொழில் கற்றவனுக திரும்பி வந்தபோதுகூட 'அவள் ஒருத்தி இருக்கிருள்' என்ற நினைவே எனக்கில்லை. என் வாழ்விலே அவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

கிராமத்திலே அன்று பூச்சொரி விழா!

அன்று இரவு செண்பகம் என்னை எப்படியோ பார்த்துவிட்டாள். ஊரின் ஒதுப்புறத்திலே ஒரு மாந்தோப்பு. அதற்குள் நாங்களிருவரும்! ஊரார் முழுதும் விழாக் காண விரைந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் மட்டும் புலம்பிக்கொண்டிருந்தோம்.

"இன்னும் ஏன் உனக்கு திருமணம் ஆகவில்லை?"

"நல்ல இடம் கிடைக்கவில்லையாம்!"

"நல்ல இடமென்றுல்...!"

"உங்களைப்போல தொழில் கற்றவராகவும், செல்வாக்குள்ளவராகவும் தேடுகிருர்கள்,"

"என்ன என்னை உதாரணம் காட்டுகிருய்?"

"ஆமாம, உங்களைத்தான் அண்ணு இப்போது குறிவைத்துக் கொண்டிருக்கிருர்."

"கொல்வதற்கா?"

"இல்லை; என்னைக் கொடுப்பதற்கு! உங்களிடம் வந்து கேட்டால் அந்தஸ்துக் கெட்டுவிடும் எனறு யோசித்துக்கொண்டிருக்கிருர்."

"செண்பகம், நான் முந்திய நிலையில் இல்லை. நான் உன்னை மறந்து இரண்டாண்டுகளாகி விட்டன, இனி உனக்கும் எனக்கும் உறவு என்பது அறவே இல்லை. ஆனுல் நீ என் அன்போவியம்."

"முடியாது; என்னைக் கொன்று விட்டுப் போங்கள்!" என்று அழுது புலம்பி என் மார்பில் சாய்ந்தாள். மறுகணம்?

ஆ!

-என் முதுகில் ஈட்டி பாய்ந்தது.

அ....அ...அ...!-என்று செண்பகம் கதறினுள்." - மோகனம் கதையை முடிக்கவில்லை.

★

சக்திவேலுவின் உளறல் நிற்கவில்லை. "மோகனத்தை அவமானப் படுத்தினேன்: என் தங்கையின் வாழ்வு சருகாகி வந்தது. மீண்டும் அதே மோகனத்திடம் போய் செண்பகத்தை ஏற்றுக்கொள் என்று கேட்க என் மனம் இடந்தரவில்லை.

(10ம் பக்கம்)

மேலூர் தி. மு. க.

◉

30—10—55 மாலை 6மணிக்கு மேலூர் (மதுரை மாவட்டம்) முனியாண்டி கோயில் திடலில் ஆசிரியர் கண்ணதாசன் சொற்பொழிவாற்றுவார்.

ஒருத்தி ஒருவனைப் பார்க்கிறாள். பார்க்கிறாள் என்றால், நினைத்த நினைப்பிலே, எடுத்த எடுப்பிலே நேரேபோய் நின்று தையற்காரர் பார்க்கிற மாதிரி மேலும் கீழுமா பார்க்கிறாள்? இல்லை! பார்க்கவேண்டும் என்ற ஆசை உந்தித் தள்ளுகிறது. தலை நிமிர்ந்து பார்க்க முயலும் போது, நாணம் யானை பலத்தோடு தலையில் ஏறிஉட்கார்ந்து கொண்டு தலையைக் கீழே கவிழ்த்து விடுகிறது. அதனாலே வள்ளுவனின் காதலி, காதலன் நோக்காத போது, தான நோக்கி, நோக்கும் போது தலை குனிந்து நிற்கிறாள். ஆனால், முத்தொள்ளாயிரக் காதலி இன்னும் ஒரு படி மேலே போய், தலை தூக்கிப் பார்க்கவே முடியாமல், நாணத்தின் முழு ஆட்சிக்கும் அடங்கிக் கிடக்கிறாள். மனது என்னமோ, 'பார்க்க வேண்டும். பார்க்க வேண்டும்' என்று துடிக்கிறது. ஆனாலும் முடியவில்லை. தவளை தண்ணீருக்கு இழுக்கிறது; எலி வளைக்கு இழுக்கிறது! அதனால் எந்த இடத்திற்கும் போகமுடியாமல் இரண்டும் நின்றஇடத்திலேயே வலிந்து கொண்டிருக்கின்றன. முத்தொள்ளாயிரக் காதலிக்கும் அப்படித்தான். ஆசை பார்க்கச் சொல்கிறது, நாணம் தலைதூக்கவிடாமல்தடுக்கிறது. ஆகவே, குனிந்த தலை, குனிந்தபடியே நிற்கிறாள் கூடற் பெருமாட்டி, குவளைவிழிச்சிமாட்டி. தோழியை அழைக்கிறாள். "அடி, தோழீ! வண்டுகளின் பசித் துன்பத்தைப் போக்கும்படி, மிக்க தேனுள்ள பூக்களால் கட்டப்பட்ட மாலையணிந்தவனும், வலிய குதிரைப்படை உடையவனுமாகிய பாண்டியனை, யான் பாராமல் இருந்தேனென்றால் என் தோள்களெல்லாம் மெலிந்துவிடும்; அவனை முன்னின்று பார்க்க வேண்டும் என்றாலோ நாணம் வந்து, தடுத்துக் கொள்கின்றது; நாணமிருந்தேனென்றாலோ, என் பெண்மை நலன் அழிந்துவிடும். இந்த இடையூறு வந்து சேர்வதால் யான் அவனைக் கண்டு துன்பந்தீர்வதோர் வழியைக் காணாதவளானேன்" என்கிறாள்.

காதல்! பார்க்க முடியாத காதல்! அடக்கப் பண்பின் உச்சம். திராவிட சமுதாயத்தின் வெகு நாளைய சொத்து. இராமனைக் காணச் சீதாபிராட்டி துடித்ததையும், உப்பரிகையில் இருந்தபடி வரிசிலை அண்ணல் வருவானா என்று அந்த வாட்கண் நங்கை தேடியதையும், கோமுனியுடன் வந்தான் அந்தக் கொண்டல் என்றதும் அவன் தாமரைக் கண்ணினனை என்று கண்களாலே தடவித் தடவி ஆராய்ச்சி செய்து, முடிவு கண்டு, 'ஆம் இவனே ராமன்' எனத் தெளிவு கண்டதையும், வாமமேகலையிற அல்குல் வளர்ந்து பூத பௌதிக விஞ்ஞான மாறுதல அடைந்ததையும, நோக்கிய நோக்கெனும நுதி கொள்வேலினை ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்ததையும், அதே நேரத்தில் அந்த வீக்கிய கனைகழல் வீரன் செங்கண் சீதாபிராட்டியின் தனத்தில் தைத்ததையும், தைத்து, சுந்தர காண்டத்தில் ஓரிடத்தில் வருவது போல கொங்கையை உழுததையும் கண்ணிணை ஒன்றையொன்று கவ்வி, கரப்பான் பூச்சியைக் கவ்விய பல்லி போலத் துடித்ததையும படித்துவிட்டு, நாணத்தால் தலை தூக்கவே முடியாத தமிழ்ப் பெருமாட்டியைப் பார்க்கும்போது, அட தமிழ் மகனே! நமது பரம்பரைப் பண்பின் பெருமை தெரியுமப்பா! கம்பனிலே கமயூனிசம் காணும் வேடதாரிகளே! நீங்களும தமிழராகப் பிறந்த காரணத்தால் உங்களுக்கும் அது தெரிய வேண்டுமே! தெரியவில்லை என்றால் முத்தொள்ளாயிரம் படித்துவிட்டுக் கம்பராமாயணம் படியுங்கள்.

நாணத்தால் பெண்மை நலனழியும். அழியலாம் என்ற சந்தேகம்கூட அல்ல. அழியும் என்பது சட்டம். முதல் முதலில் இராமனைப் பார்க்கும்போது கூட, சீதையை நாணம் அழுத்தி, பார்க்க முடியாதவாறு செய்யவில்லையே! காலணா அகலம் குங்குமப் பொட்டிட்டு, கடை வீதியில நின்றபடி புது வேடமிட்டு, வந்தாரைப் போனாரைக் கை காட்டி யழைக்கும் விலை மாதுக்கும் சீதைக்கும் என்ன வித்தியாசம்? நாணங் கெட்டவள் மானம் கெட்டவள். அது தானே தமிழன் சட்டம்? அத்தகையவள்தான் முத்தொள்ளாயிரக் காதலி. 'நாணொடுடன் பிறந்த' நங்கைதான தமிழ் நங்கை.

பாண்டியனைக் காணவில்லையேல், தன் தோள்கள்மெலிந்து, கைவளையல்கள் கூட சோர்ந்து

(9-ம் பக்கம்)

காமம் நெருப்பு. எத்தகைய நெருப்பு? தொட்டால் குளிர்ந்து, நீங்கினால் எரிக்கும் புதுமையான நெருப்பு! தனித்திருக்கும் காதலியையோ, காதலனையோ அந்த நெருப்பு உருக்குலைத்துவிடுகிறது. இது, காமத்தின் தன்மை பற்றி, கவிஞர்கள் விளம்பும் கவி மிகைப்பாடு. காமம் அதிகமாக வந்தது என்பதை அந்த அளவுக்கும் அதிகமாக, நெருப்புடன் ஒப்பிடுகிறார்கள் கவிஞர்கள். ஆகவே, காமத்தின் தன்மையை நெருப்போடு ஒப்பிடுவதே கவி மிகைப்பாட்டின் கடைசி எல்லையாகக் கொள்ளலாம். தனக்குள் தோன்றி, தன்னையே எரிக்கும் நெருப்பு அது! காதலர் தொட்டால் குளிர்ந்துவிடும் பெற்றோரோ, மற்றைய தோழியரோ தொட்டால், உடம்பின் மேற்பரப்பிலே அந்தச் சூடு தெரியாது. காரணம், அது உள்ளத்திலிருந்து, அந்த எண்ணம் கொண்டவரையே எரிக்கும் நெருப்பு. சுருக்கமாகச் சொன்னால் அது புறநெருப்பல்ல, அகநெருப்பு! அகநெருப்பின் தன்மை, அந்த அகத்துக்கு உடையவரை என்ன பாடு படுத்திற்று என்பதைத்தான் கவிசொல்லலாமே தவிர, அது, வேறுசில பொருள்களையும் எரித்ததாகச் சொல்லுவது தவறு. காரணம், அந்த நெருப்பு, உவமைக்காக வந்த நெருப்பே தவிர, 'பெட்ரோல்' ஊற்றி வைக்கப்பட்ட நெருப்பல்ல! அல்லது, 'டைபாயிட்' காய்ச்சல்போல், மேனியிலே தோன்றும் நெருப்புக்கூட அல்ல! அதனால்தான் வள்ளுவன் சொன்னான்,

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

—1104—

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

—1159—

—என்று.

ஆனால், கம்பநாட்டாழ்வார் ஒரு நெருப்பைக் காட்டுகிறார். அந்த நெருப்பு, காமநெருப்பு என்றுதான் அவரும் சொல்கிறார். ஆனால், அந்த நெருப்பினுடைய தன்மை என்ன? தலைவியினுடைய அகத்தில் நின்று, அந்த அகத்தை மட்டுமே எரிக்கின்ற நெருப்பா? இல்லை! அகத்தைப் பிய்த்துக்கொண்டு புறத்திற்கும் வரும் நெருப்பு! மேனி வழிப்பாயும் நெருப்பு! அந்த மேனியின்மீது படும் எல்லாவற்றையுமே எரிக்கும் நெருப்பு! அட, அது மட்டுமா? தண்ணீரையே, வெந்நீராக்கும் நெருப்பு! வீடு பற்றி எரிந்தால்கூட, தண்ணீரை விட்டால அணைந்து போகிறது. ஒரு பெரிய மரத்தையே எரித்து, அந்த நெருப்போடு தண்ணீருக்குள் அள்ளிபபோட்டாலும், நெருப்பு அணைந்து போகுமே தவிர, தண்ணீர் வெந்நீராகாது! ஆனால், கம்பனார் கைவண்ணம் பெற்றெடுத்த ஒருத்தி, தண்ணீருக்குள் கிடக்கும் போது, அவளது காமநெருப்பால் தண்ணீர வெந்நீராகிவிடுகிறது! அதாவது, அவள் ஒரு 'பெரிய அளவு மின்சாரச் சூடாக்கி' (Big-Size Electric Heater). இப்போது வந்திருக்கிறதே, தண்ணீருககுள் போட்டு தண்ணீரைச் சூடாக்கும் புதுவகைச் சூடாக்கி, அதுபோன்றவள் கம்பனார் காட்டும் காரிகை! அதுவும் எவ்வளவு பெரிய பொய்கை! பரந்த பொய்கை! ஒரு மைல் நீளம், ஒரு மைல் அகலம் இருக்கலாமென்று நாமாக ஒரு கணக்குப போட்டுக்கொள்ளலாம். காரணம, கம்பனார் கற்பிப்பது 'பெரிய பொய்கை.' அவ்வளவு பெரிய பொய்கையும வெந்நீராகி விடுகிறது என்றால் எவ்வளவு நெருப்பு அவள் மேனியில் இருந்திருக்கவேண்டும்? இருந்தும், அது அவளுடைய மேனியை எரிக்கவில்லை என்பதுதான விஞ்ஞான பூர்வமான ஆச்சரியம்! அகநெருப்பைப் புறநெருப்பாக்கி, தண்ணீரை வெந்நீராக்குகிற அளவுக்கு 'இமாலயக் கற்பனை' தமிழ்ப் பண்பாட்டுக் காப்பியங்களில் கிடையாது. அவ்வளவு 'சூடான காதலி,' கம்ப காவியத்தைத் தவிர, வேறெதிலும் காணக் கிடைக்கமாட்டாள்! இந்த உவமை, கவிஞனின் வெறிநிலையிலே தோன்றிய ஆபாசம் என்பதைத் தவிர, கவித்துவ முறையில் இதற்குக் காரணம் கூற யாராலும் முடியாது. கம்பனாரின் கைவண்ணம், கீழே காணப்படுவது. அதன் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பதவுரையை எழுதியவர், வை. மு கோபாலகிருஷ்ணமாச்சாரியார்

கதம்ப நாள்விரை கள்ளவிழ் தாதொடும்
ததும்பு பூந்திரைத் தண்புனல் சுட்டதால்
நிதம்ப பாரத்தொர் நேரிழை காமத்தால்
வெதும்பு வாளுடல் வெப்பம் வெதுப்பவே.

—புன. வி. ப 24—

பதவுரை.—காமத்தால் வெதும்புவாள் - காமவேதனையால் வெப்பங்கொண்டவளும், நிதம்ப பாரத்து ஓர் நேர் இழை - நிதம்ப பாரத்தைக் கொண்டவளுமான அழகிய ஆபரணத்தையுடைய மடந்தை யொருத்தியின் உடல் வெப்பம் - உடம்பின் தாபம், வெதுப்ப - சுட்டதனால், - கதம்பம் - நறுமணப் பொடியைக் கொண்டனவுமாகி, கள் அவிழ்-தேன்சிந்தப் பெற்று, தாதொடும் ததும்பு - கேசரங்களோடு நிரம்பியுள்ள, பூ-மலர்களைக் கொண்ட, திரைதண்புனல்-அலைகளோடு கூடிய (அப்புனல் விளையாட்டிற்கு உதவிய) குளிர்ந்த நீர்த்தடமும், சுட்டது - வெப்பங்கொண்டது; (எ - று) ஆல் - வியப்பைக் குறிக்கும்; ஒருத்தியின் காமத்தால் நீர்த்தடமே வெப்பமடைந்தமையை வியந்தவாறு.

—கண்ணதாசன்

வேலங்குடித் திருவிழா

5

எதிர்பாராத விதமாக அம்பிகாவைக் கண்ட மங்கையர்க்கரசி கமலத்தை ஓரக் கண்ணால் பார்த்தபடி அவளை வரவேற்றாள். கமலம் முந்தானையால் கண்ணீரைத் துடைத்தவாறு எழுந்து உள்ளே சென்றாள். "உட்காரு" என்று அம்பிகாவைப் பார்த்து அலுப்போடு சொன்ன மங்கையர்க்கரசி, அந்த அலுப்பிலேயே அம்பிகாவைப் பற்றிய தனது கருத்தைப் பிரதிபலித்தாள். "நம்மீது இவர்களுக்கென்ன கோபம்?" என்று குழம்பிய அம்பிகா, அந்தக் குழப்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக மங்கையர்க்கரசியோடு ஏதேனும் பேச விரும்பினாள். என்ன பேசுவது? எதை ஆரம்பிப்பது? என்று சிந்தித்தாள். அதற்குள் மங்கையர்க்கரசியே, "நீ என்னடியம்மா திடீர்னு புறப்பட்டுட்டே மேலைச்சிவபுரியிலிருந்து?"-என்று கேள்வியைத் தொடங்கினாள். அம்பிகா குழப்பத்திலிருந்து விடுபட்டு பதில் சொல்லப் போகும்போது, அவள் மனம் மற்றொரு புதுக்குழப்பத்தை ஏற்படுத்தியது. ஒருவேளை அன்றிரவிலே நடந்த சம்பவங்கள் இவர்களுக்குத் தெரியுமோ? அப்படியே இருந்தாலும் அதற்கும் கமலத்தின் கவலைக்கும் என்ன தொடர்பிருக்கமுடியும்? என்பதுதான் அம்பிகாவுக்கு ஏற்பட்ட புதுக் குழப்பம். ஒருவாறு சமாளித்துக்கொண்டு "ஒன்றுமில்லை. வேற்று மனிதர் வீட்டில் ஏன் இருக்கவேண்டும் என்றுதான் புறப்பட்டுவிட்டேன்." என்று ஒரு பொய்யைச் சொன்னாள்.

'அதென்னவோ நீ வந்ததும் போனதும்......நல்லா இருக்க வேண்டிய வீடு சங்கடத்தில் முடிந்தது" என்று சொல்லிக்கொண்டே ஒரு வாளியைத் தூக்கிக்கொண்டு உட்புறம் நுழைந்தாள் மங்கையர்க்கரசி. பதில் சொல்ல விரும்பிய அம்பிகா, மங்கையர்க்கரசி உள்ளே சென்றுவிட்டதாலே ஏமாற்றமடைந்தாள். கட்டிலில் உட்கார்ந்தபடியே சுற்றுமுற்றும் பார்த்தாள். அடுத்த அறையில் நின்றுகொண்டு ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டு நின்ற கமலத்தை அம்பிகா கண்டாள். கமலம் ஓசையில்லாமல் அவளை உள்ளே அழைத்தாள். உள்ளே சென்று அமர்ந்தாள் அம்பிகா. கமலமும் அவள் அருகிலேயே உட்கார்ந்தாள்.

' என்ன நடந்தது கமலம்?"-அம்பிகா அவசரமாகக்கேட்டாள்.

"நேற்றைக்கு இரவில் அத்தானைப் பார்க்க நீ மாடிக்குப் போனதையும், அங்கு நடந்ததையும் திரும்பி நீ சென்றதையும் நான் பார்த்துக்கொண்டுதானிருந்தேன்"-கமலம் நிறுத்தவில்லை. அதற்குள் அம்பிகா திடுக்கிட்டாள். "ஆ!" என்றாள். கமலம் தொடர்ந்தாள் :

"நீ கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றதும் அதுவரை மாடிப்படியிலேயே நின்று கவனித்துக்கொண்டிருந்த நான். கீழே இறங்கி வந்து படுத்துக்கொண்டு விட்டேன். ஏனோ எனக்கு அந்தக் கடிதம் என்னவென்று தெரிந்துகொள்ளும் ஆசை பிறந்தது. அதற்குள் என் அத்தான் மாடியிலிருந்து இறங்கி,வெளியிலேபோவதைக் கண்டேன். இதுதான் சரியான சமயமென்று மாடிக்குச் சென்று அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தேன். பிறகு ஒன்றும் புரியாமல் அந்தக் கடிதத்தை என் ரவிக்கைக்குள் வைத்துக்கொண்டேன். அம்பிகா, நீ திகைக்கிறாய். அந்தக் கடிதத்தின் சாரத்தை அறிந்துகொண்டுவிட்டேனே என்று கலங்குகிறாய். மேலும் அதை ஒளித்துக்கொள்ள முயன்ற என்னை மோசமானவளாகக் கருதவும் கூடும். என்னால் ஓரளவு புரிந்துகொள்ள முடிகிறது உன் நிலையை. நான் ஏன் அப்படி நடந்துகொண்டேன்? கன்னி கழியாத நிலையில் அத்தகைய துணிச்சல் எனக்கு வந்திருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்ன? என்பதெல்லாம் உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒரு பெண் ஒரு ஆடவரை கண்ணீரோடு சந்திக்கிறாள், காலைப்பிடிக்கிறாள்,கலங்கித் திகைக்கிறாள் என்றால் அதற்கு உள்ளார்ந்த காரணம், ஏதேனும் ஒருவகையில் நடத்தைத் தவறாகத் தானிருக்க முடியும் என்று நான் படித்திருக்கிறேன். உங்களிருவரிலேயார்நடத்தை தவறியவர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் எனக்குஏற்பட்டது. தவறு உன் பக்கத்தில் இருந்தால் எங்கள் குடும்பத்திலே ஒருத்தியாக உன்னை வைத்துக்கொள்ளக்கூட முடியும். ஆனால் அவர் தவறு செய்தவர், அதே குணம் படைத்தவர், புதிது புதிதாக நாடும் எண்ணங்கொண்டவர் என்றால் என் தமக்கையின் வாழ்வு என்ன ஆகுமோ? என்கிற பீதி என்னை ஆட்டிப் படைத்தது. அதுதான் அந்தக் கடிதத்தைப் படிக்க என்னைத் தூண்டியது. அம்பிகா அவர் என் தமக்கையைக் காதலித்து மணம் முடிக்கவில்லை. ஏமாற்றித்தான் ஒப்படைத்தோம். அவரும், போனால் போகிறது என்று பரிதாபத்திற்கு இரங்கித்தான் சேர்ந்து வாழ முடிவுகொண்டார். அது நீடிக்க வேண்டுமே என்று நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். அவர் மிகவும் ஒழுங்கானவர். ஆகவே கைவிட்டுவிட மாட்டார் என்று எங்கள் கவலைக்கு நாங்களே சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் இப்படி ஒரு வெடி என்றால் அடுத்த நிகழ்ச்சிகளை மனம் பயங்கரமாகக் கற்பனை செய்யாமலா இருக்கும்! அந்த நேரத்தில் அப்படித்தான் என் மனம் துடி துடித்துக் கொண்டிருந்தது. உனக்கும் அவருக்குமுள்ள காதல் பற்றியோ, உங்கள் தொடர்பைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை. இப்படியே மூன்று, நான்கு, ஐந்து என்று போய்க் கொண்டிருந்தால்......? என்பதுதான் என் பயம்.

நான் கடிதத்தை ரவிக்கைக்குள் வைத்துக்கொண்டதும் திடீரென்று விளக்கு அணைந்தது. யார் அணைத்தது என்று பார்ப்பதற்கு முன்னாலேயே விளக்கை அணைத்த உருவம் என்வாயைப் பொத்தியது. ஆடவர் கை! என் மேனி சிலிர்த்தது. கத்த முயன்றேன், குரல் எழவில்லை. அதற்குள் மற்றொரு கை என் மார்பின்மீது விழுந்தது. ஐயோ! என்ன சொல்வேன் அம்பிகா; நான் ஏன் அந்தக் கடிதத்தை ரவிக்கைக்குள் வைத்துக்கொண்டேன்! கையிலேயே வைத்திருக்கக்கூடாதா! மார்பின்மீது கைவிழுந்ததும் என் மேனி வியர்த்து விறு விறுத்தது. என் வாழ்வே பாழாகிவிடுமோ என்கின்ற அர்த்தமில்லாத பயம் என் மனதைக் கவ்வியது. பளிச்சென்று என் கைகளால் மார்பகத்தை மூடிக்கொண்டேன்; ஆனால் அந்தக் கை என்னைக் கெடுக்க நினைத்து விழுந்த கையல்ல. கடிதத்தை எடுக்கவந்த கைதான் என்பதைப் பின்னால் தான் உணர்ந்துகொண்டேன். நான் மானம் காக்கக் கைகளால் போர்த்தினேன். அதை, நான் கடிதத்தை மறைப்பதாக எண்ணி, பலவந்தப்படுத்திய அந்த உருவம் என் ரவிக்கையையே கிழித்துவிட்டது. கூவினால் மானம் போகும், கூவாவிட்டால் உயிர் போகும் என்கிற நிலையில் நான் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தேன். அதற்குள் அந்தக் கடிதம் கீழே விழுந்தது. இருட்டிலே அலைந்து தேட முடியாது என்று எண்ணியோ என்னவோ அந்த உருவம் விளக்கை ஏற்றிற்று. அதுவரைக்கும் கூவாமலேயே இருந்த நான் என்னையும் அறியாமலேயே கூவிவிட்டேன். அத்தான் அங்கே நின்றார். பருவப்பெண்ணான எனது அவயவத்தை, அவர்காண நேர்ந்ததே என்பதே என் கூச்சலுக்கு ஒரு காரணமாகும். நான்கூனிக் குறுகித்திரும்பி நின்றேன். அவர் அந்தக் கடிதத்தைக் கையிலெடுத்துக் கொண்டார். அம்பிகா, ஒருநாள் பழகிய ஒருத்தியிடம் வெட்கத்தை விட்டு இவ்வளவு சொல்லுகிறாளே என்று நீ நினைப்பாய். அந்த ஒரு நாளிலேயே உன் நல்ல இதயத்தை நான் தெரிந்துகொண்டேன். அதோடு அந்தக் கடிதமும் உன் இதயத்தை எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தது."

-இந்த இடத்தில் அம்பிகாவின் கண்களில் கண்ணீர் ததும்பியது. கமலம் மேலும் தொடர்ந்தாள்: "நள்ளிரவு! நானும் அவரும் மட்டுமே இருக்கிறோம். இன்னும் கொஞ்சநேரம் தாமதித்தால் உணர்ச்சி வெறியில் அவர் அலைக்கழிக்கப்படலாம் என்று பயந்து நான் வெளியேறினேன். வெளியில் வந்த அவசரத்தில் மாடிப்படியில் கால் சறுக்கி உருண்டு விழுந்தேன். அதுவரைக்கும் யாரும் அறியாமலிருந்த இந்த நாடகம், அப்போது எல்லாரையும் எழுப்பி விட்டது. விளக்குகள் ஏற்றப்பட்டன. இந்திரா - அக்காள் எழுந்து ஓடிவந்தாள். எல்லோரும் என்னை வெறித்துப் பார்த்தார்கள் ஏன் இவள் மாடிக்குப் போனாள் என்கிற கேள்விக்கு எல்லோரும் தவறான ஒரு பதிலையே கண்டுபிடித்தவர்கள் போல் என்னைப் பார்த்தார்கள். சந்தேகத்திற்கு இடமில்லாத தங்கை என்று என்னைக் கருதுகிற தமக்கைகூட தன் ஆத்திரப் பார்வைமூலம் என் சஞ்சலத்தை வளர்த்தாள். எதையும் நிதானித்துப் பார்க்கிற என் அண்ணாவும் என்னைச் சந்தேகப்பட்டார். யாருக்கு என்ன பதில் சொல்வேன்? அந்தப் பதில் என்ன அந்த அவசரத்திலே, அவ்வளவு சுலபத்திலே சுருக்கமாகச் சொல்லிவிடக்கூடியதா? மேலும், கிழிந்திருந்த என் ரவிக்கைக்கு நான் சொல்லும் காரணத்தை அவர்கள் ஏற்பார்களா? நான் திகைத்தேன், திணறினேன் வாய் விட்டு அழுதேன். அந்த அழுகை எவர் மனதையும் கரைக்கவில்லை. கரைக்காதென்பதும் எனக்குத் தெரியும். நாடகமாடுகிறாள் பார்; நீலிக்கண்ணீர் வடிக்கிறாள் பார் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். அவர்கள் நினைத்தது தவறென்று நான் சொல்லமாட்டேன். ஏற்கனவே என்னைக் காட்டித்தானே என் தமக்கையை அவருக்கு மணம் முடித்தார்கள்....."

-கமலம் நிறுத்தவில்லை. அதற்குள் அம்பிகாவின் முகம் கறுத்தது. இதுவரை அவள் நம்பிய வார்த்தைகளைக்கூட இனி நம்ப முடியாதவளாகிவிட்டது போல் அவள் முகத்தோற்றம் எடுத்துக் காட்டியது. கமலம் அதைக் கவனித்தாள். அதற்குச் சமாதானம் கூற முடியாமல் மேலும் தொடர்ந்தாள்:

"...எனக்கும் அத்தான் மீது ஏதோ மயக்கமிருந்ததுபோல் அவர்கள் கருதிக்கொண்டார்கள். ஒரு வார்த்தைகூடப் பேசாமல் என் தாய் 'பளார்' என்று என் கன்னத்தில் அறைந்தாள். கண்விழித்து என்னைக் காப்பாற்றுகிற தமக்கை அப்போது என்னைக் காக்க முன் வரவில்லை. எல்லோரும் என்னை ஏசினார்கள். நடந்தது யாருக்குத் தெரியும்? எனக்குத் தெரியும். அத்தான் அறிவார். நான் சொன்னால் நம்பமாட்டார்கள். அவர் சொல்ல வரமாட்டார். இந்த நிலையில் நான் எல்லா ஏச்சுக்களையும் தாங்கிக் கொண்டேன். ஐயோ, அம்பிகா! இன்னும் இந்த விநாடி வரை நான் அவர் மீது ஆசைகொண்டு சென்றதாகவே அனைவரும் கருதுகிறார்கள். என் மானம் மரியாதையையே சந்தேகிக்கிறார்கள். அப்போதே என் தமக்கை மாடிக்குச் சென்று அவர் காலில் விழுந்தாளாம். பின் என்ன? கோபிக்கவா முடியும்? கோபிக்கக்கூடிய உரிமையுடனேயா அவள் மணமுடிக்கப்பட்டாள்? அத்தான் என்ன சொன்னாரோ தெரியாது. இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். இந்திரா என் அம்மாவைப் பார்த்து 'இப்பொழுதே இவளைக்கூட்டிக் கொண்டு புறப்படுங்கள்' என்றார். மீனாட்சி அத்தையும் மாமாவும் எவ்வளவோ தடுத்தார்கள். எது எப்படி ஆகியிருந்தாலும் கவலை இல்லை அதற்காக நீங்கள் புறப்பட வேண்டாம் என்று, வேண்டிய மட்டும் சொன்னார்கள். ஆனால் எதற்கும் என் குடும்பத்தார் இணங்கவில்லை. உடனே புறப்பட ஆயத்தம்செய்தார்கள். மூட்டைகளைக் கட்டிக்கொண்டிருக்கும்போதே அவசரம் பொறுக்காமல் என் தாய் என்னை தனியே இழுத்துக் கொண்டுபோய், "ஏண்டி, ஏன் ரவிக்கை கிழிந்திருக்கிறது? எதற்காக மேலே போனாய்? உன்னைத் தொட்டாரா? கெட்டாயா? தப்புத் தவறு நடந்ததா? சொல்லடி குடிகெடுக்க வந்தவளே" என்று தலையில் ஓங்கி ஓங்கி அடித்தாள். அந்த அடி எனக்கு வலிக்கவில்லை. ஆனால் அந்தச் சொல்லைத்தான் என்னால் பொறுக்க முடியவில்லை. இவ்வளவு சங்கடமான சந்தர்ப்பத்தை என் வாழ்வில் நான் சந்திக்க நேருமென்று ஒருபோதும் கருதியதில்லை அம்பிகா. இனி நான் வாழ்வது எப்படி? என் வாழ்க்கை வளமாவது எப்படி? இந்தச் சந்தேகம் தெளிவது எப்போது?"

--கமலம் விக்கி விக்கி அழுதாள். அம்பிகா அவள் கண்ணீரைத் துடைத்தாள். அவள்கூட கமலத்தின் பேச்சில் முழுத் தெளிவு பெற்றவளாயில்லை. ஆயினும் பெண்மைக்குள்ள இயற்கையான இளகிய மனத்தின்படி அவள் கமலத்தைப் பார்த்து "கவலைப்படாதே! நானே உன் பெற்றோர்களுக்குச் சொல்கிறேன்" என்று எழுந்தாள். கமலம் அரைமனத்தோடு அதற்குச் சம்மதித்தவள் போல் மௌனமாக இருந்தாள். எழுந்து மறுகட்டுக்கு வந்த அம்பிகா, மங்கையர்க்கரசி காய்கறி வாங்க சந்தைக்குப் போயிருப்பதாக அறிந்தாள். சின்னப்பபிள்ளை மோல்மேன் நாற்காலியில் சாய்ந்து நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார். ஆகவே மங்கையர்க்கரசி வரட்டும் என்று எண்ணித் திரும்பிய இந்திராவின் கண்கள் மூலையறையில் சுந்தரம் உட்கார்ந்திருப்பதைக் கண்டன. அவன் ஏதோ படித்துக்கொண்டிருந்தான். அந்த அறை வாசலில் போய் நின்ற அம்பிகா 'அய்யா அய்யா' என்று குரல் கொடுத்தாள். சத்தம் கேட்ட சுந்தரம், வாருங்கள் என்று அழைத்தான். அம்பிகா உள்ளே சென்றாள். அவளைப் பார்த்து சுந்தரம் திடுக்கிட்டான். அந்த வீட்டிற்கு அவள் வந்து வெகு நேரமாகியும் அவன் அப்போதுதான் அவளைச் சந்தித்தான். ஏதோ கேட்க வந்தவன் முதலில் உட்காரும்படி கை காட்டினான். அம்பிகா உட்கார்ந்தாள்.

"உங்களிடம் மனம் விட்டுப் பேச ஆசைப்படுகிறேன்" என்று தொடங்கி முழுவதையும் விளக்கமாக கூறினாள். தங்கையைப் பற்றி நன்றாகத் தெரிந்தவனாகையால் அப்படித்தான் ஏதாவது இருக்கமுடியுமென்று அவன் எண்ணியிருந்தான். ஆகவே அம்பிகாவின் விளக்கத்தில சுந்தரம் தெளிவு பெற்றான். இப்படி இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது மங்கையர்க்கரசி தடதடவென அங்கே வந்தாள். அம்பிகாவைப்பற்றி ஏதோ ஒரு சந்தேகத்தை மனதின் வைத்திருந்தவள்போல், "அடியம்மா, நீ உடனே வெளியிலே போ! உன்னைப் பாத்தா நல்லவளாத் தெரியல்லே! போ வெளியிலே!" என்று அதட்டினாள். சுந்தரம் தடுக்க முயன்று தோற்றான். கமலம் பேசமுடியாதவளாய் நின்றாள். சின்னப்பபிள்ளை தூக்கம் கலைந்தும் பயந்தபடியே நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அம்பிகா கண்ணீரோடு வெளியேறினாள். சுந்தரத்தின் மனது நிலைகொள்ளவில்லை. முன்னும் பின்னுமாக உலவிக்கொண்டிருந்தான். கமலம் சிவந்த முகத்தோடு அங்கே வந்தாள். அவளைப் பார்த்ததும் விம்மி, விம்மி அழுதுவிட்டான் சுந்தரம். 'அழாதீர்கள்' என்று சொல்ல வந்து, 'அண்ணா' என்ற கமலம் தானும் அழ ஆரம்பித்தாள். களங்கமற்ற இரண்டு இதயங்கள் பரிமாறிக்கொள்ளும் செய்தி கண்ணீர்தானே! சுந்தரம் அவளை அமைதிப்படுத்திவிட்டு ஏதோ நினைத்தவன் போல் தன் தாய் அந்தப் பக்கம் இல்லாத நேரம் பார்த்து மெதுவாக வெளியேறினான்.

தெருத் தெருவாகச் சுற்றிக் கொண்டு வந்தாள் அம்பிகா. சுந்தரமும் அவளைத் தேடிக் கொண்டு சுற்றிவந்தான். கடைசியில் திருச்சி ரோட்டுக்குப் பக்கத்திலுள்ள சினிமா கொட்டகை அருகில் அவளைக் கண்டுபிடித்தான். அவனைக் கண்ட அம்பிகாவும் தன்னைச் சமாதானப் படுத்தத்தான் வந்திருப்பான் என்பதைப் புரிந்துகொண்டாள். சுந்தரம் அவள் அருகில் வந்து "என்னோடு வா. ஒன்றும் பேசாதே! வீதியில் எல்லோரும் பார்க்கிறார்கள்." என்று சொன்னபடி முன்னால் நடந்தான். அம்பிகாவும் அவனைப் பின் தொடர்ந்தாள். கொஞ்ச தூரம்தான் போயிருப்பார்கள். ஒரு நீல வாகனம் (போலீஸ் வண்டி.) அவர்கள் எதிரே வந்தது. அருகில் வந்ததும் நின்றது. அதிலிருந்து ஒரு போலீஸ் அதிகாரி கீழே இறங்கி தன் பையிலிருந்து ஒரு படத்தை எடுத்து அதையும் அம்பிகாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார். அம்பிகாவும் சுந்தரமும் திகைத்து நின்றார்கள். அதிகாரி அம்பிகாவை வண்டியிலேறுமாறு ஆணையிட்டார். அம்பிகா திடுக்கிட்டாள். சுந்தரம் இடைமறித்து, "ஐயா, அவள் என்னோடு வந்திருக்கிறாள்; விட்டு விடுங்கள்" என்றான். அதிகாரி அவனை மேலும் கீழும் முறைத்துப் பார்த்துவிட்டு "நீ தான் அந்த ஆளா? நீயும் ஏறு வண்டியிலே!" என்று ஆணையிட்டார். சுந்தரம் குழம்பினான். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு இருவரும் வண்டியிலேறினார்கள்.

திருத்தம்

சென்ற இதழ் 'வேலங்குடித் திருவிழா' தொடர்கதையில், 8-ம் பக்கம், 2வது பாரா, 15-வது வரியில் **பாலன்** என்பதற்குப் பதிலாக **சுந்தரம்** என்று பிரசுரமாகியிருக்கிறது. **பாலன்** என்று திருத்திக் கொள்க.

இதைக் குறிப்பிட்டு கடிதம் எழுதியுள்ள நண்பர்களுக்கு நன்றி.

கற்புக்காத்த தமிழ் மரபை கலப்பு சாதி என்கிறார்களே!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டவரால் பழித்துரைக்கப்படுகிறோம்.

நீக்ரோக்கள் வாழ்ந்த காலம் எங்கே? வெள்ளையர் வாழ்ந்த காலம் எங்கே? நாம் தோன்றிய காலம் எங்கே? நீக்ரோக்களும், வெள்ளையர்களும் சேர்ந்த "கலப்பாம்" நாம். வன்கணாளர்கள் வரலாறு தருகிறார்கள். கல்லும், மண்ணும், மரமும் தோன்றாமுன்பே முன்தோன்றியது நம் குடி என்று பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றனவே. தற்பொழுது இருநூறு, முந்நூறு வருடங்களுக்கு முன்பு வந்த வெள்ளையர்களுக்கும், நீக்ரோக்களுக்கும் என்ன சம்பந்தம்? கலைத்துறையிலே, இனத்துறையிலே, மொழித்துறையிலே, எந்தத் துறையில் ஆராய்ச்சி நடத்தினாலும் நீக்ரோக்களும், வெள்ளையர்களும், நாமும் ஒன்று சேரமுடியாதே.

அரசாங்கம், அதிலும் தமிழ் அரசாங்கமாகிய சென்னை அரசாங்கம் உடனடியாக இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலை நாட்டிலே ஏற்பட்டிருக்கும் இந்தத் தப்பான எண்ணம் மாறவேண்டும். "பச்சைத் தமிழன்" எனப் புகழ்கிறோமே சென்னை முதல் மந்திரி திரு. காமராச நாடார் அவர்களை? அவர் காணட்டும் இந்தக் கண்ணராவிக் காட்சியை. நேரு பண்டிதரிடம் சொல்லட்டும். அமெரிக்க நாட்டில் உள்ள இந்தியத் தூதர் காரியாலயங்களுக்கு இக்குறிப்பை அனுப்பி, தவறான வரலாற்றை திருத்தச் சொல்லவும். அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், நாவலர்கள், சிந்தனைச் சிற்பிகள், கடமை வீரர்கள், சொல்லின் செல்வர்கள், புலவர்கள் எல்லோரும் இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டார்கள் என நினைக்கிறேன். மறத்தமிழரின் மரபுக்குக் களங்கம் ஏற்படாமல் செய்ய வேண்டும். தமிழர்களே, புரட்சிக் கவிஞர் பொன்மொழியை மறந்துவிடாதீர்கள் "பங்கம் விளைந்திடில் தமிழருக்கே--உடல் பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்."

"கொலைவாளினை எடடா மிகு,
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒருபுலியே உயர்
குணமேவிய தமிழா."

ஆகவே ஆவனசெய்யுங்கள் எனக் கூவி அழைக்கிறேன் அறிஞர்களை. வணக்கம்.

இப்படிக்கு,
ம. சி. இராமமூர்த்தி,
திருச்சிராப்பள்ளி.

◉

விசாகப்பட்டினம்.
18-10-55.

அன்புள்ள கண்ணதாசன் அவர்களுக்கு, வணக்கம். தாங்கள் நடத்தி வரும் தென்றலைத் தொடர்ந்து படிப்பவன் நான். அதில் வரும் இலக்கியக் கட்டுரைகள் என்னை ரொம்பவும் கவர்ச்சிக்கின்றன. தென்றலைப் பத்திரமாகச் சேர்த்துவைக்கிறேன். நிற்க,

ஒரு சந்தேகம் உங்களிடம் கேட்க வேண்டும். நீங்கள் தெனாலிராமனுக்கு வசனம் எழுதுவதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். எனது தெலுங்கு நண்பர் ஒருவரோடு அது விஷயமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது, தெனாலி ராமன் காளியைச் சந்தித்ததாகவும், "எங்களுக்கெல்லாம் ஒரு மூக்கில் ஜலதோசம் வந்தால் பொறுக்க முடியவில்லையே, உனக்கு ஆயிரம் மூக்கில் ஜலதோசம் வந்தால் என்ன செய்வாய்" என்று கேட்டுச் சிரித்ததாகவும், அதனால் தான் காளி அவனை 'விகடகவி ஆவாய்' என்று சபித்ததாகவும் சொல்லுகிறாரே, அப்படித்தான் எழுதியுள்ளீர்களா? விபரமான பதில் எழுதவேண்டுகிறேன். பத்திரிகையில் இல்லாவிட்டாலும் எனக்கு நேரடியாகப் பதில் எழுதினாலும் போதும். வணக்கம்.

அன்புள்ள
தென்றல் பிரியன்,
வி. சாந்தமாதவன்,

அப்படி ஒரு காட்சி 'தெனாலி ராமன்' படத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் அவர்கள் எழுதிய குறிப்பை வைத்து, தெலுங்கிலே சமுத்திராவா என்பவர் ஒரு புதுமாதிரியான காட்சி அமைத்திருக்கிறார். தெனாலி ராமன், தெனாலியிலிருந்து விஜய நகரத்திற்கு வரும் வழியில் ஒரு காளி கோயிலில் ஆடு பலி நடப்பதைக் கண்டதாகவும் அதைத் தடுத்ததாகவும் காளியின் சிலை பயங்கரமாய்இருப்பதை நகையாடி, 'தாயென்றால் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?' என்று ஒரு உருவத்தைக் கற்பனை செய்ததாகவும், அந்தக் கற்பனை உருவத்தோடு வாதாடியதாகவும் அவர் எழுதியுள்ளார். அதனையே ஜெமினி நந்தனார், ஞானசவுந்தரி முதலிய கதைகளை எழுதி டைரக்ட் செய்தவரும் ஜெயகோபி தமிழ் வசனம் எழுதியவருமான பிரபல எழுத்தாளர் டைரக்டர் திரு. முருகதாசா அவர்கள் தமிழ்ப்படத்தில் மொழி பெயர்த்து வைத்துள்ளார். 'தெனாலிராமன்' படம் சுமார் ஆறுயிரம், ஏழாயிரம் அடி எடுக்கப்பட்ட பிறகுதான் தயாரிப்பாளர்கள் என்னிடம் வந்தார்கள். தெனாலிராமனைப்பற்றிய சில அரசியல் குறிப்புகளையும், சரித்திரக் குறிப்புகளையும் நான் தந்துதவினேன். அதனையே வைத்து வசனம் எழுதித் தரும்படி என்னிடம் கேட்டார்கள். சுமார் 35 சீன்கள் வரை, நான் அவர்களுக்கு எழுதித் தந்தேன். அவற்றில் சில 'தென்றல்-திரை' இதழ்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. காளியைக் கற்பனை செய்துதான் பார்க்கிறான் என்றாலும், அதுகூட எனக்கு உடன்பாடல்ல என்பதால் தயாரிப்பாளர்களும் என்னிடம் கேட்கவில்லை. நானும் அதில் ஈடுபாடு கொள்ளவில்லை. அதுமாதிரி ஆபத்துக்களில் நான் ஒருபொழுதும் மாட்டிக் கொள்ளமாட்டேன். எனக்கு முக்கியம் கட்சி. அதை எப்போதும் மனதிலிருத்திக் கொண்டுதான் கலை உலகில் பணி புரிந்து வருகிறேன். சிற்றினங்களைப் பற்றி நான் கவலைப்படுவதுமில்லை, கவலைப்படப் போவதுமில்லை. என் மனச்சாட்சிக்கு,— என் தோழர்களுக்குத் தூயவனாக நடந்துகொண்டால் போதும் என்பதுதான் என் முடிவு.

[ஆ-ர்.]

◉ ◉◉ ◉

அடுத்த இதழில்!

திருக்குறள் புது உரை
தேன் துளிகள்

ஆரம்பமாகிறது

◉

புரட்சிக் கவிஞர்

பாரதிதாசன் எம். எல். ஏ.

எழுதுகிறார்.

◉ ◉◉ ◉

தமிழின்மீது ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது. வையாபுரியார் சொல்வது போல் சொன்னால் கொடுங்கோலாட்சி புரிந்தது வடமொழி. அதன் பலன் தமிழ் மக்களுக்கு "ஐங்குறு நூறு தெரியாது: பதிற்றுப் பத்துத் தெரியாது: வளையாபதி தெரியாது: முத்தொள்ளாயிரம் தெரியாது கலிங்கத்துப்பரணிதெரியாது: ஆனால் கம்பராமாயணம் தெரியும்" என்கின்ற நிலைமைக்கு வந்து நின்றது. இப்படி தமிழின் மீது ஏற்பட்ட முதல் படையெடுப்பு வெற்றிகரமாக நடந்தேறியது, இரண்டாவது ஆங்கில மொழிப் படையெடுப்பு இன்று வந்தது. இதிலும் அந்த மொழியோடுகூட அதன் கலாச்சாரமும் பரவியதைக் கண்டோம். தமிழருடைய தொனியே மாறிவிடக் கண்டோம். நாளை வர விருக்கிறது இந்தி மொழி.

இலக்கிய இலக்கணமற்ற அந்த மொழி பழம் பெரும் தமிழ் மொழியையும் அடக்கி யாளும் உள் நோக்கோடு வருகிறது. இனம் வகுத்து எழுத்துப் பிரித்த தமிழிலக்கணத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இல்லாத அந்த லம்பாடி மொழி அதிகாரப் பூர்வமாக நம் தலை மீது வந்து அமர இருக்கிறது. சமீபத்தில் மதுரைத் திருவள்ளுவர் கழகத் தலைவர் இந்திய அரசியல் சட்டத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு தனக்கு வேண்டுமென்று விண்ணப்பித்திருந்தாராம், அப்படியே அவர் கைக்கு ஒரு தமிழ் மொழி பெயர்ப்புக் கிடைத்தது. என்ன தெரியுமா அது? முழுக்க முழுக்க தேவ நாகரி லிபியிலேயே எழுதப்பட்டது. இதிலேயே அந்த மொழி தமிழகத்திற்குள்வருவதினுடைய நோக்கம் புரியும். இந்த மூன்றும் படையெடுப்பை நாம் சமாளிக்க வேண்டும். எதற்கும் தயாராயிருக்க வேண்டும்."

இவ்வாறு 18-10-55ம் தேதி மாலை 5-மணிக்கு அமேரிக்கன் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் 'தென்றல்'ஆசிரியர்கண்ணதாசன் குறிப்பிட்டார். மாணவத் தோழர் மு. இளமாறன் தலைமை வகித்தார். ஏராளமான மாணவர்கள் குழுமியிருந்தனர், மண்டபம் நிரம்பி வழிந்தது.

இலக்கியத்தில் காதல்...

6-ம் பக்கம் தொடர்ச்சி

தொலைத்துவிடும் என்கிறான். ஏக்கத்தால் உடலிலே ஏற்படுகிற மாற்றம் இடுப்புக்குக் கீழே போகவில்லை மேலேயும் போகத் தேவையில்லாத இடத்திற்குப் போகவில்லை.

**'......................முன்னின்று
காணுங்கால் கைவளையுஞ்
சோருமால்'**

என்கிறான்.

வள்ளுவனின் காதலிக்கும் அப்படித்தான் ஆகிறது. இத்தகைய உயர்ந்த காதலியைச் சித்தரித்துக்காட்டும் கற்பனைச் செல்வம் முத்தொள்ளாயிரத்தில் காணப்படுகிறது. அது இது:

**நாணுக்கால் பெண்மை
நலனழியும் முன்னின்று
காணுக்கால் கைவளையுஞ்
சோருமால்; காணேனன்
வண்டெவ்வந் தீர்தார்
வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோர் ஆறு.**

- 28 -

நூல்நயம்

தெனாலிராமன்

நகைச்சுவைக்கலை, நாட்டில் பண்டிருந்தே இருந்து வருவதாகும். எனினும், அக்கலை பலரால் வெறும் பொழுது போக்காகவே கையாளப்பட்டு வந்திருக்கிறது. ஒரு சில நகைச்சுவைக் கலைஞர்கள், அக்கலையை, பொழுது போக்காகக் கொள்ளாமல் பொருள் உள்ளதாகவும், புத்தி தருவதாகவும் கொண்டனர். அந்த நிலையை உண்டாக்கியவர் தெனாலியில் பிறந்த தெனாலிராமன்தான். தான் அரசவை விகடகவியாக இருந்தபோதிலும், தன் விகடத் திறமையால் வேடிக்கை காட்டி, மன்னர் கிருஷ்ணதேவராயரின் தவறுதல்களைத் திருத்தி வந்தார். வேடிக்கை செய்தே மூடநம்பிக்கையை ஒழித்தார். நாட்டின் நிலையையும் பண்பாட்டையும் நன்கறிந்த விகடகவியால், நாடுமட்டுமல்ல, உலகமே திருந்திவிடலாம். அத்தகைய விகடகவி தெனாலிராமனை கதையை--அவர் செய்த வேடிக்கையை எளிய தமிழில், அழகாக, சுவைபட எழுதியுள்ளார் இதன் ஆசிரியர் ராமையா. தெனாலிராமனைப் பற்றிய முழு வரலாற்றையும் நன்கறியச் செய்த இதன் ஆசிரியரைப் பாராட்டுகிறோம். டாக்டர் மு. வ. அவர்களின் அணிந்துரை நூலை அழகு செய்கிறது.

விலை ரூ. 1

விற்பனை உரிமை, பாரி நிலையம், சென்னை.

◉

தாமரைக் குமரி

தமிழ் இலக்கிய உலகம் மிகப் பரந்த ஒன்றாகும். அந்த உலகத்திலே, உரைநடையைவிட செய்யுள் தான் அதிகம் கையாளப்பட்டு வந்திருக்கிறது. மிகப்பழைய நூல் எனக் கருதப்பட்டு வரும் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், செய்யுளாகவே அமைந்திருப்பது தமிழ் மொழியின் தன்மைக்கும், தமிழ்ப் புலவர்களின் திறமைக்கும் எடுத்துக் காட்டாகும். ஆனால், அப்புலவர்களில் பலர், தங்கள் அறிவுத் திறமையை, கடவுள்களின்மேல் செய்யுள் இயற்றியதன் மூலம் குறைத்துக்கொண்டார்கள். அதன் பின்னர், இருபதாம் நூற்றாண்டில் ஒரு புதுப் பரம்பரை தோன்றியிருக்கிறது. பாரதி, துவக்கம் செய்ய, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தன் ஆசானினும் முன்னேற, அவரைப் பின்பற்றி 'பாரதிதாசன் பரம்பரை' ஒன்று தோன்றியுள்ளது. இப்பரம்பரை புரட்சிக்கும், புதுமைக் கருத்துக்கும், புராண ஒழிப்புக்கும் தன் திறமையைப் பயன்படுத்துகிறது. இப்பரம்பரையில் வந்தவர்தான் திரு. மு. அண்ணாமலை (பி. ஏ. ஆனர்ஸ்) அவர்கள்.

'தாமரைக்குமரி' என்னும் நூல் அவர் எழுதிய கவிதைகளின் தொகுப்பாகும். கவிதையிலே நாட்டம் கொள்ளாதவர்கள் கூட திரு. அண்ணாமலை அவர்களின் கவிதையைப் படித்தால், தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற முடிவிற்கு வருவர். அந்த அளவிற்கு எளிய நடையிலும், விளங்கும் முறையிலும் அமைந்திருக்கின்றன அவரின் கவிதைகள். இத்தொகுப்பில் உள்ள 'வற்றிய ஓடை' என்னும் காவியத்தில் சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளையும், அதன் காரணமாக நாட்டில் கைகூடாக் காதல் தோன்றுகிற பரிதாபத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆசிரியர் இதுபோன்ற கவிதைத் தொகுப்புக்களை மேலும் வெளியிட்டால் கவிதைப் பித்தர்களின் ஆவல் நிறைவேறும் என்று நம்புகிறோம். இவ் அரிய நூலை வெளியிட்ட 'அன்புப் பண்ணை'யோருக்கு நம் நன்றி.

விலை ரூ. 1-8-0

விற்பனை உரிமை, பழனி பிரசுரம், புதுக்கோட்டை.

— தமிழ்ப்பித்தன்

★ ★ ★

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

தமிழ்த் தாலுகாக்களில் ஐந்தைத்தான் புதிய தமிழகத்தோடு சேர்க்கக் குழு சிபாரிசு செய்திருக்கிறது-- அவை, அகத்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகும்; தேவிகுளம், பீருமேடு தாலுகாக்களிலும், நெய்யாற்றங்கரைத் தாலுகாவின் பெரும் பகுதியிலும், சித்தூர் தாலுகாவிலும் தமிழர்கள் பெரும்பான்மையராக இருந்தும், அங்கெல்லாம் நடைபெற்ற தேர்தல்கள் தமிழர்களையே தேர்ந்தெடுத்து, அவை தமிழ்ப் பகுதிகள்தாம் என்பதை விளக்கியிருந்தும், பசில் குழு, அவற்றைக் கேரளத்தோடு சேர்க்க முற்பட்டிருப்பது கண்டனத்துக்குரியதேயாகும்; கொள்ளேகாலம்-- பெரும்பான்மையான கன்னடியர்களால் நிறைந்திருக்கிறது--என்று தாலுகா ரீதியில் கணக்கிட்டு, அதனைக் கன்னடத்தோடு சேர்க்க முற்படும் பசில் குழு, தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் ஆகிய தாலுகாக்களைத் தமிழகத்தோடு சேர்க்காமலிருப்பது என்ன முறையின்பாற்பட்டதோ தெரியவில்லை!

தமிழகத்தின் வடக்குப் பகுதியில் ஆந்திர மாநிலத்தில் சிக்கிக்கிடக்கும் தமிழ்ப் பகுதிகள், தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்பதை, பிரச்சினையை அணுக இருக்கும் இந்திய அரசாங்கமானாலும் சரி--அல்லது, ஆந்திரா-சென்னை அரசாங்கங்களானாலும் சரி-அவை, தம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

கருநாடகத்தை ஒட்டித் தொடர்ந்தாற்போல் உள்ள கன்னடம் பேசும் பகுதிகள் ஆந்திராவில் சேர்க்கப்பட்டிருந்தாலும், கேரளத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும், அவை சம்யுக்த கருநாடகத்தோடு சேர்க்கப்பட வேண்டியதோடு, ஐதராபாத்தில் இருக்கும் கன்னடப் பகுதிகளும் கருநாடகத்தோடு சேர்க்கப்படவேண்டும் என்பதே நியாயமாகும்; பசில்அலி குழு, இவைகளை முழுதுமாக கவனிக்காதது பெருந் தவறாகும்.

அதுபோலவே, ஐதராபாத்திலுள்ள தெலுங்குப் பகுதிகள் ஆந்திரத்தோடு சேர்க்கப்பட்டு, 'விசாலாந்திரம்' உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்பதும் நியாயமே; பசில் குழு அறிக்கையில் கண்டபடி பிரிக்கப்படும் கன்னட, மராட்டியப் பகுதிகள் நீங்கலாக எஞ்சிய தெலுங்குப் பகுதிகள் 'ஐதராபாத்' என்ற பெயரில் ஒன்றாக வைக்கப்பட்டு, 1961-ம் ஆண்டு பொதுத் தேர்தலின் முடிவுக்கு விடப்படுவது முறையாகாது; ஐதராபாத்திலுள்ள அந்தந்த மொழிப் பகுதிகள் அந்தந்த மொழி மாநிலங்களோடு சேர்க்கப்பட வேண்டும் என்பது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்.

பிரெஞ்சு ஆட்சியிலிருந்த திட்டுக்களின் வருங்காலம் பற்றி எதும் தெரிவிக்காமலிருப்பது வருந்தத்தக்கது; புதுவை காரைக்கால் பகுதிகள் தமிழகத்துடனும், மாகி பகுதி கேரளத்துடனும், ஏனாம், ஆந்திரத்துடனும் சேர்ப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக எடுக்கப்படவேண்டும் என்பதை, இதுபோது, ஆட்சியாளர் நினைவுபடுத்திக்கொள்வது நல்லது.

சுயநல நோக்கத்திற்காகச் சில முதலாளிகளால் பரப்பப்பட்டிருக்கும் 'தட்சிணப்பிரதேசம்' என்ற அமைப்பை, கேரளப் பொதுமக்களும், தமிழகப் பொது மக்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற காரணங்காட்டி அதனை ஒப்புக்கொள்ளாமல் விட்டுவிட்ட பசில்குழுவின் செயல் வரவேற்கத் தக்கதாகும்.

புதிய மாநில அமைப்பில், தமிழ் பேசும் மக்கள் அடங்கிய பகுதியைச் சென்னை மாநிலம் என்று அழைப்பதை யாரும் விரும்பவில்லை-- விரும்பமாட்டார்கள்; எனவே, அதனைத் தமிழகம் என்றோ, அல்லது தமிழ் நாடு என்றோ அழைக்க வேண்டும்; அந்தப்படிக்கு பசில் குழுவின் அறிக்கை திருத்தப்பட வேண்டும்.

மாநிலத்தில் அரசாங்க அலுவல் பதவிகளில் பாதி அளவு வெளி மாநிலத்தாருக்கு ஒதுக்கி வைக்கப்படவேண்டும்--என்று அறிக்கை கூறுவதையும், உயர்நீதிமன்ற நீதிபதிப் பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு வெளி மாநிலத்தாருக்கு ஒதுக்கிவைக்கப்படவேண்டும் என்று அறிக்கை கூறுவதையும், திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாக மறுக்கிறது; மாநில அரசாங்கப் பதவிகளைப் பொறுத்து, முழுச் சலுகைகளும் அந்தந்த மாநிலத்தாருக்கே அளிக்கப்பட வேண்டும்; மத்திய அரசாங்க அலுவல்களைப் பொறுத்து, மாநிலங்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்; மாநிலங்கள், தம்மிடம் ஆட்கள் இல்லாத நிலையில், தேவையான நிபுணர்களை வெளி மாநிலங்களிலிருந்தோ--வெளி இடங்களிலிருந்தோ வேண்டுமானால் வரவழைத்துக் கொள்ளலாம்.

தென்னகத்தில், இந்திப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று பசில் குழு அறிக்கை கூறுவது அவசியமற்ற கூற்றாகும்; தென்னகத்திற்கு அது சிறிதும் அவசியமற்ற ஒன்றாவதோடு, தென்னக மொழிகளின் வளர்ச்சியை அது பாதிக்கக்கூடியதாகவும் அமைந்துவிடும்; எனவே, அப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்திற்குத் தென்னகத்தில் அவசியமில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது; 'வடநாட்டில் தென்னக மொழி ஒன்றைப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் வைக்கவேண்டும்,' என்று பசில் குழு கூறுவது, வெறும் கண்துடைப்பு வேலையாகும்; அதனால் திராவிடத்துக்கு ஒரு பலனும் இல்லை.

தென்னகத்தில் மொழிவழி மாநில அமைப்புக்காக நியாயமான அடிப்படைக் கிளர்ச்சிகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கி உருவான •டன் காண முயலும்;

இரா. நெடுஞ்செழியன்,

சென்னை-13, } பொதுச்செயலாளர்
14-10-55. } தி. மு. கழகம்.

நாடறிந்த பூமாலை...

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

பூச்சொரி விழா! அந்த விழாவை முன் நின்று நடத்துவோரில் நானும் ஒருவன். அன்று அதே வேலையாக அலைந்தேன். இரவு பத்துமணி வரை, செண்பகத்தைப் பற்றிய கவலையே எனக்கு உரவில்லை.

பதினொரு மணி இருக்கும். செண்பகத்தைக் காணவில்லையே என்று வீடு முழுதும் தேடினேன். தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தேன். பக்கத்து மாந்தோப்பில் இருவர் பேசிக்கொண்டிருந்தது அந்த நிலவொளியில் நன்றாகத் தெரிந்தது. வழக்கமாக உடன் எடுத்துச்செல்லும் ஈட்டியோடு சென்றேன். பச்சை நிறக் கம்பளி-தலையிலே கனமான தலைப்பாகை-ஒரு இளைஞன் நின்றான் சோகமாக. செண்பகம் கண்ணீர் வழிந்த கண்களோடு அவன் மார்பில் சாய்ந்துகிடந்தாள். ஆத்திரம் சில சமயங்களில் சுயநலத்தின் துணைகொண்டே வந்துவிடுகிறது. தங்கை செய்த தவறு எனக்குப் புரிகிறது. ஆனாலும் என் ஈட்டி அந்த இளைஞன் முதுகிலே தான் பாய்ந்தது. யாருடைய வாழ்வுக்காக மோகனத்திடம் வலியச் சென்று கெஞ்சுவதற்கு வெட்கப்பட்டேனோ அந்தச் செண்பகம் மாற்றான் மார்பிலே புதைந்துகிடந்தால் என் உள்ளம் எப்படி இருக்கும். ஆனால்...! குத்தப்பட்டவன் யார்? நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது! அந்த மோகனத்தைத்தான் குத்திவிட்டேன். ஆம்! மோகனம்தான் செண்பகத்தோடு பேசிக்கொண்டிருந்தான். 'நாளைக் காலையில் மோகனத்தைப் பார்ப்போம். ''கடந்ததை மற; இனி நீ என் மைத்துனன்தான்' என்று சொல்ல எண்ணிக்கொண்டிருக்கும் போது இப்பேர்ப்பட்ட படுகொலை நிகழ்ந்துவிட்டது. ஈட்டியோடு ஓடினேன். செண்பகம் வேறொரு திக்கு நோக்கி ஓடினாள். தனித்தனியாகப் பிரிந்துவிட்டோம். இன்னும் ஒன்று சேரவில்லை.

மோகனசுந்தரம் செத்துப்போனான்!
நான் எங்கோ இருக்கிறேன்!
செண்பகம் எங்கே போனாளோ?

காதலை நெறித்துவிட்டேன். காசினி பெற்ற நல்ல நாதசுரப் புலவனைக் கொன்று, அந்த நாடறிந்த பூமாலையை கருகச் செய்துவிட்டேன. சக்திவேல்-இன்னும் புலம்பித்திரிகிறான்.

திருப்புத்தூரில் அண்ணா

★

20-10-55 மாலை 6 மணியளவில் திருப்புத்தூர் (இ. மா.) ஊராண்மைக் கழகத்தின் சார்பில் வி. ஏ. பீட்டர் தலைமையில் மன்ற உறுப்பினர்கள், அறிஞர் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு மடல் வாசித்துக் கொடுத்து மலர் மாலைகள் அணிவித்தனர்.

ஜனாப் அப்துல் காதர் அண்ணா அவர்களைப் பாராட்டி கவி ஒன்றைப் படித்துக் கொடுத்தார். வரவேற்புக்கு அண்ணா அவர்கள் நன்றி கூறினார்.

மாநிலப் புது அமைப்புத் திட்டம்

பொதுச்செயலாளர் அறிக்கை

இந்தியத் துணைக் கண்டத்தின் மாநிலங்களைப் புதிய முறையில் திருத்தி அமைப்பதற்கான ஆலோசனையைக் கூறும்படி 1953-ஆம் ஆண்டில் இந்தியப் பேரரசினரால் நியமிக்கப்பட்ட பசில் அலிக் குழு இப்பொழுது தன் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

புதிய மாநில அமைப்புகள் எப்படி இருக்கவேண்டும் என்று ஆங்காங்குள்ள மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்களோ, அத்தகைய ஆவல்களை முழுவதும் நிறைவேற்றாத முறையிலும், பற்பல இடங்களில் முரண்பட்ட வகையிலும் பசில் அலிக் குழு தன்னுடைய கருத்துக்களைச் சிபாரிசு செய்துள்ளது;

இந்தியாவிலுள்ள எல்லாப் பிரிவினரையும் திருப்திப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு, எவரையும் திருப்திப்படுத்தாத நிலையை குழுவின் அறிக்கை உண்டாக்கியிருக்கிறது.

அறிக்கை எதிர்பார்த்த பலனை பயக்காத காரணத்தால், இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்காங்குள்ள தலைவர்கள் தம் மறுப்பு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்; ஆங்காங்கு மறியல்கள், வேலை நிறுத்தங்கள், கடையடைப்புகள் போன்ற கிளர்ச்சிகள் வலுப்பெற்று வருகின்றன; தத்தம் கோரிக்கையை வலியுறுத்த ஆங்காங்குள்ள ஆண்களும் பெண்களும், இளைஞரும் முதியோரும், மாணவரும் அரசியல் கட்சியினரும் போராட்டங்களுக்கான ஆயத்தங்களைச் செய்துவருகின்றனர்; தென்னகத்தில் கொந்தளிப்புகள் எழுவதற்கான அறிகுறிகள் தென்படத் துவங்கிவிட்டன.

மாநிலங்கள் புதிய முறையில் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டால், மாநிலப் புது அமைப்புக் குழு எந்த வகைகளில் தவறு செய்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். வெள்ளையர் ஆட்சியின் கீழ் மாநிலங்கள் இயற்கையாகவும், செயற்கையாகவும் கண்ட கண்டபடியெல்லாம் பிரிக்கப்பட்டுக் கிடந்ததால், இயற்கையான ஒருமைப்பாடுள்ள மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்படவேண்டும் என்று எல்லோராலும் உணரப்பட்டது; பல்லாண்டு காலமாக அந்த உணர்வே எல்லோருக்கும் எல்லா அரசியல் கட்சியினராலும் ஊட்டப்பட்டு வந்தது. இந்த உணர்வு ஆளவந்துள்ள கட்சியாகிய காங்கிரசுக் கட்சியால் மிகவும் அழுத்தந் திருத்தமாக ஊட்டப்பட்டு வந்தது என்பதை எவரும் மறுக்க இயலாது. மாநிலங்கள் புதிதாகத் திருத்தி அமைக்கப்படுவதற்கு, 'இப்பொழுது மாநிலங்கள் மொழிவழி அமைந்திருக்கவில்லை; அவை மொழிவழி அமைக்கப்படவேண்டும்' என்பதுதான் நெடுநாளாக உணரப்பட்டுவந்த காரணமே ஒழிய, பொருளாதார வசதியோ, நிர்வாக வசதியோ, இயற்கை அமைப்போ, நில அமைப்போ அல்ல; இப்பொழுது இந்தியத் துணைக் கண்டம் எங்கணும் கொந்தளிப்புகள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், பசில் அலிக் குழு, நீண்ட காலமாக உணரப்பட்டு வந்த மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுக்காமல், வேறு பல காரணங்களுக்கும் முக்கியத்துவமும் முதலிடமும் கொடுத்து, அந்த வகையில் மாநிலங்களைப் பிரிக்க முயன்றிருப்பதுதான்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை மொழிவழி மாநிலப் பிரிவினைக்கு முதலிடம் கொடுப்பதும், திராவிடத்தின் முழு விடுதலையைக் குறிக் கோளாகக் கொள்ளுவதும் ஆகும்; இந்த அடிப்படையில் நின்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பசில் அலிக் குழுவின் அறிக்கையை நோக்குகிறது—ஆய்ந்து பார்க்கிறது;

பசில் அலிக் குழு சென்னை வந்திருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அக்குழுவிடம் வைக்கப்பட்ட கருத்துக்களில் முக்கியமான சிலவற்றை இங்கே நினைவுபடுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்;---

''தற்போதைய அரசியல் அமைப்பு, பல நூற்றாண்டுகளாக மெல்ல மெல்ல, சில சமயங்களில் இயற்கையாகவும், வேறு சில சமயங்களில் செயற்கையாகவும் வளர்ந்ததின் விளைவு; அவை முழுவதும் இந்த நாட்டை அடிமைகொண்ட அந்நிய அரசுகளால் செய்யப்பட்டன; அவர்களின் செயல் நல்ல எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்---நச்சு எண்ணத்துடனும் இருந்திருக்கலாம்; ஆனால், இந்த மண்ணுக்கு உரியதல்ல என்பதுமட்டும் திண்ணம்; ஓர் அந்நிய அரசு, சாதாரண இயல்புப்படியே யார் மண்ணுக்கு உரியவர்களோ அவர்களின் எண்ணங்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வழிவகைகள் காணமுடியாது; எனவே, பலம் பொருந்திய-உறுதியான-திறமை மிக்க அரசாங்கத்தை நிறுவுவதே அவர்களின் ஒரே குறிக்கோளாய் விளங்கியிருக்கிறது;

''ஆகவேதான். பரந்த இந்தியத் துணைக்கண்டமானது, இன்றைய தினம், வலிந்து திணிக்கப்பட்ட பல நிர்வாகப் பகுதிகளின் தொகுப்பாகக் காட்சியளிக்கிறது: இந்த அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு அவர்களுக்கு ஆயுதமாக இருந்தது அறிவல்ல---அதிகாரக் கோலாகும்; இந்தத் தவற்றை எடுத்துக் காட்டிய பெருமை நிச்சயமாகக் காந்தீயக் காங்கிரசையே சாரும்; வெறும் நிர்வாக மண்டலங்களுக்குப்' பதிலாக, இயற்கையான-ஒருமைப்பாடுள்ள - தேசீயப் பிரிவுகளுள்ள அரசுகள் நிறுவப்படவேண்டும் என்ற மொழிவழிப் பிரிவினைக் கொள்கையை மக்கள் மன்றத்தில் வைத்துத் திறமையுடனும்; தெளிவாகவும் காங்கிரசு வாதாடியது; யார் மொழிவழி பிரிவினைக் கொள்கைக்காக வாதாடினார்களோ, அவர்கள் ஆளவந்தார்களாகி விட்டனர்; ஆனால், மொழிவழிப் பிரிவினைக் கொள்கையைக் காங்கிரசுச் சர்க்காரே எதிர்க்கவும் கண்டிக்கவும் ஆன விசித்திரமான நிலை ஏற்பட்டுள்ளது; இன்றைய ஆளவந்தார், வெள்ளையரிடம் கற்ற வித்தையை வைத்துக்கொண்டு. 'ஏக இந்தியா,' 'இந்தியாவின் ஒருமைப்பாடு,' என்பன போன்ற தங்களுக்கு 'செல்லமான' கொள்கைகளை வற்புறுத்துகின்றனர்...'ஏக இந்தியா,' 'இந்தியாவின் ஒருமைப்பாடு' என்ற கொள்கைகளை எவ்வளவுதான் வற்புறுத்தினாலும் இந்தியத் துணைக் கண்டமானது பல்வேறு தேசீயப் பிரிவுகளைப் - ஒன்றிற் கொன்று முரண்பாடில்லாவிட்டாலும், ஒன்றுடன் ஒன்று ஒரே வார்ப்பில் சேர்க்கப்பட விரும்பாத பல்வேறு தேசீயப் பிரிவுகளைக் கொண்டது என்பதை எவரும் புறக்கணித்துவிட முடியாது;

''மொழிவழிப் பிரிவினை என்பது பல்லாயிரக் கணக்கானவர்கள் தத்தமது தாயகத்தைப் பெறவும், தங்களது அறிவால் - ஆற்றலால் அதைச் சீராக்கி செம்மைப்படுத்தவும் விரும்பும் இதய எழுச்சியாகும்; சுருங்கச் சொல்லின், இதுதான் தேசீய உணர்வாகும்; மொழிப் பற்று, இந்த உணர்வின் வெளிப்படை அம்சமாகும்; வெறும் நிர்வாகப் பிரிவுகள் மூலம் தரப்படும் இடம் தங்களது தேசீய உணர்வுக்கு அடிக்கப்படும் சாவு மணி என்பதே அவர்களின முக்கியத்துவமாகும்; இந்த வாதத்தை, ஒற்றுமை - கட்டுப்பாடு என்ற பெயரால் சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது;

''மொழிவழி பிரிவினைக் கோரிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட மொழியின் பாதுகாப்புக்காகமட்டுமல்ல-ஆனால், ஒரு பொதுவான தாய்மொழியின் மூலம் உறவு கொண்ட ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தங்கள் இயற்கையான தேசீய அவாக்களை நிறைவேற்றிக் கொள்ள-ஒரே அரசியல் அமைப்பின்மூலம் சேர்ந்து வாழவேண்டும்-என்ற உண்மையை, இந்தக் குழு குறித்துக்கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டுகிறது;

''மொழிவழிப் பிரிவினை, தனது நீண்டபயணத்தின்முதற்படி-என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது; இந்த சந்தர்ப்பத்தில், திராவிடம், தமிழ்-தெலுங்கு-கன்னடம்-மலையாளம் என்ற நான்கு மொழிவழிப் பிரிவுகளை உடையது; ஆகவே, இந்த நான்கு மொழிவழிப் பிரிவுகளை அமைப்பதுதான் உடனடித் தேவை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறது; இதைச் செய்யும்போது, எந்த ஒரு மொழிப் பிரிவும், மற்றொரு மொழிப் பிரிவின் நிலப்பரப்பை அபகரித்துக் கொள்ளாதவாறு அதிகாரத்திலுள்ளோர் முழுக் கவனம் செலுத்த வேண்டும்;

''விசால ஆந்திரம், சம்யுக்த கர்நாடகம், ஐக்கிய கேரளம், தமிழகம்-என்ற பெயரால் உலவும் கோரிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதுடன் வரவேற்பதுடன், ஆதரவும் அளித்து வருகிறது;

''திராவிட முன்னேற்றக் கழகம், மொழிவழிப் பிரிவினை அமைப்பு அவசியம்-என்று கூறுவதுடன், 'இந்த நான்கு மொழிப் பகுதிகளிடையே வேறு எந்த மொழிப் பகுதிகளும் பாராட்டமுடியாத ஓர் உறவு முறை இருந்து வருகிறது' என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறது; ஏனெனில், தமிழ்-தெலுங்கு-கன்னடம்-மலையாளம் ஆகியவை ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை; இந்த மொழிகள் பேசும் மக்களிடம் ஒரு உறவுமுறை உள்ளது; இந்த உறவு ஆயிரங் காரணங்களால் உலர்ந்திருக்கலாம்; ஒற்றுமைக்கும்-தோழமைக்கும் அடிப்படையான உயிர்ச்சக்தியாக அந்த உறவு விளங்குகிறது...சுயநிர்ணய அடிப்படையில், இந்த நான்கு மொழி வழி அரசுகளின் கூட்டாட்சியே திராவிட நாடாகும்; இந்தக் கூட்டாட்சி சுதந்திரக் குடியரசு நாடாக விளங்கும்; ஆகவே, இந்த நாட்டு மக்கள், அரசியல்-பொருளாதார - கலாச்சாரத் துறைகளில் முழு வளர்ச்சிபெற வாய்ப்புப் பெறுவர்;

''ஒரு நாடு இன்பமாகவும், வளமாகவும், முன்னேற்றமுள்ளதாகவும் இருக்க ஒருமைப்பாடு தேவை; இந்த ஒருமைப்பாடு, மொழி-இனம் வரலாறு ஆகியவைகளால உண்டாக்கப்படுகிறது; அந்த நாடு பொருளாதார நிறைவுபெற்றதாக இருப்பதற்கு, அது, பரந்துள்ள நிலப்பரப்பு, தொடர்புடையதாய் இருக்க வேண்டும்; மேலே குறிப்பிட்ட எந்தக் காரணத்தை வைத்துப் பார்த்தாலும், அல்லது எல்லாக் காரணங்களையும் வைத்துப பார்த்தாலும்-திராவிடநாடு சுதந்திர ஜனநாயகக் குடியரசாக விளங்குவதற்கு உரிமையுடையது - என்பது புலப்படும்.''

இத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் நின்றுதான், திராவிட முன்னேற்றக் கழகம், இப்பொழுதும் தன்னுடைய கொள்கையை வற்புறுத்துகிறது;

பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாகத் தென்னகத்தைப் பொறுத்த வரையில், மாநில அமைப்புக்கு மொழி வழி அமைப்பைத்தான் முக்கியமாகக் கருத வேண்டும்; பொருளாதார வசதி, நில அமைப்பு, வரலாற்றுத் தொடர்ச்சி, நிர்வாக வசதி போன்ற காரணங்கள் நாட்டின் அமைப்புக்குத்தான் பார்க்கப்படவேண்டுமே ஒழிய, ஒரு நாட்டின் உள்ளடங்கிய மாநில அமைப்புகளுக்கு அத்தகைய காரணங்களல்ல முக்கியமாகக் கருதப்படவேண்டியது; நமது நாட்டைப் பொருத்த வரையில், மொழிதான் மாநில அமைப்புக்கு முக்கிய காரணமாக இருந்துவருகிறது என்பதை உணரவேண்டும்.

பசில் குழுவின் அறிக்கைப்படி, புதிய தமிழகத்தில் தமிழ் பேசும் பகுதிகள் முழுவதும் சேர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. திரு-கொச்சி அரசிலுள்ள ஒன்பது

(10-ம் பக்கம்)

வெண்பாப் போட்டி

18. நெஞ்சமே அஞ்சாதே நீ.

வெண்பாப் போட்டி 18-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ கன்னடத்திற் கேரளத்தில் ஆந்திரத்திற் பெயரிருக்கக்
கன்னித்தமிழ் நாட்டுக்கேன் இல்லை?- சென்னையெனும்
அஞ்சல் தனைமாற்றும் அறப்போர் தொடுத்திடநக்
நெஞ்சமே அஞ்சாதே நீ

—ஏ. கமலேசுகுமாரி, சென்னை-7.

★

அஞ்சாத ஈரோடு ; ஆண்சிங்க மென்னண்ணா
எஞ்சாத சொல்லழகன, என்கரங்கள்--மிஞ்சுபடை
அஞ்சேன் ; அணங்கே ! அடிபணியேன் ஆரியர்க்கே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வி. வன்னியன், பணகுடி.

★

ஓட்டவந்த அவ்வடவர் ஓலமிட்டு அன்றோட
விட்டசமி ழர்செத்து விட்டாரோ ?--முட்டமுட்ட
வஞ்சமே சூழ்ந்தி வந்தாலும் எம்மன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—போ. இராசகோபாலன், பாளையங்கோட்டை.

★

வீரத் தமிழாட்சி வெற்றிபெறக் காண்பனென்று
சூரத் தமிழண்ணா சூள்செய்தார்--சோராதே !
பஞ்சப் பிணிநீங்கிப் பார்போற்ற வாழ்ந்திடலாம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ந சண்முகம், புதுக்கோட்டை.

★

நினைவின் அகலா நெடுந்தோளன் இன்று
மனைவிட்டு மாண்பொருள் சேர்க்கத்--தொலைசெல்வான்
அஞ்சஞ் செனவே அறையும் பிரிவுக்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—இரா. வை. எழில்வழுதி, இராங்கியம்.

★

நஞ்சுண்ட ஞானி நபியும் சிலுவையிலே
துஞ்சிய ஏசுவும், தொல்லையால்--அஞ்சினரோ ?
அஞ்சாத நஞ்சுதல் பேதமை ! ஆதலால்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வழித்துணைவன், வேலைமாநகர்.

★

மாணவர்க்குப் பங்கம் மணிக்கொடிக்கிழ் நின்றிழைத்தோன்
ஆணவத்தை முன்அடக்க ஆர்த்தெழுவாய்--ஈனனுக்கு
வஞ்சமார் காங்கிரசு வந்துதவி செய்தாலும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—பா. சு. காசிநாதன், புதுவை.

★

நல்லதொரு கொள்கையை நாளும் எதிர்த்திங்கே
அல்லல் விளைப்பர் அறிவிலிகள்--அல்லலால்
துஞ்சும் நிலைமைதான் தோன்றினும் சோர்வுற்று
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ஆ. அழகன், புதுச்சேரி.

★

இந்தியெனும் வேதாளம் இன்மொழியாம் நம்தமிழை
வந்து விழுங்கிடவே பார்ப்பதனால்--முந்திப்போய்
நஞ்சூட்டிக் கொன்று நமது தமிழ்காக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. தியாகராசன், சேர்வைநகர்.

இட்டமுடன் என்னகத்தே இன்ப முடன்புகுந்து
விட்டார் வரமறந்து விட்டாரோ ?--முட்டமுட்டச்
சஞ்சலமேன் ? கொஞ்சும் தலைவரதோ ! காண் ! அசட்டு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—சுப. இளங்கோவன், சென்னை-14

★

அண்ணா நெடுஞ்செழியன் அன்பழகன் கைகளிலே
பொன்னான நம்நாடு கிட்டிவிடின்--அன்னவர்கள்
பஞ்சம் சிறிதுமின்றிப் பார்புகழச் செய்திடுவர்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ச கள்ளபிரன், திருச்சி.

★

சிறுமையுற்ற செல்வத் திராவிடத்தை மீட்க
செறுவரும் என்றிடின் சென்று--பெருமையுடன்
வெஞ்சமரில் பங்கேற்று வெற்றிக் கொடிநாட்ட
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—இரா. சிதம்பரம், திருப்பரங்குன்றம்.

★

நேரு மறுத்தாலும் நீசர் எதிர்த்தாலும்
பாரில் சிறந்த திருவிடத்தை--ஆரியத்திற்
கஞ்சாத 'நம்மண்ணா' சீக்கிரத்தில் வாங்கிடுவார்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ஆதி. நாவரசன், தொளார்.

★

வஞ்சகரின் வல்லாட்சி இப்பொழுதே மறையுதுபார்
செஞ்சட்டைச் சீரழிவு தெரியுதுபார்--வஞ்சகர்க்கு
அஞ்சாத அண்ணா தலைமையில் ஆளுவோம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—டி. ஞானப்பிரகாசம், அனுமந்தராயன்கோட்டை.

★

நெய்யோ டுணவல்ல, நீர்க்கஞ்சி யுங்கிட்டா
வெய்ய வறுமைக்கே உட்பட்டோம்--உய்வின்றி
மிஞ்சினால் சாவோம் ! மகிழ்வேதான் ! மற்றென்ன ?
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—தமிழ்வேள், வேலூர்.

★

குங்குமப் பொட்டிழந்து கொத்துப்பூச் சூடாத
மங்கை மதிமுகத்தில் மஞ்சளில்லை--தங்கமே
வஞ்சகச் சாதி வழிமறித்தால், நானேற்பேன்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—அரு. இராசகோபாலன், பூங்காரு.

★

பாலாறு ஓடிப் பவளச்செந் நெல்விளைந்தும்
கூழேனு மில்லையடா கும்பிக்கு--கேள்மகனே
நெஞ்சிலே ஊற்றில்லை நீள்ஆற்றில் வீழ்ந்திடுவோம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ஏ. ராஜன், குமராபுரி.

★

கஞ்சியின்றி பஞ்சையாய் நெஞ்சுலர்ந்து காலமெல்லாம்
வஞ்சனையால் வாழ்வின்றி வாட்டமுற்றுத்--துஞ்சிடினும்
கொஞ்சுமொழி செந்தமிழைக் கொல்வாரைக் கொன்றுவிட
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—அமுதன், சிக்கராயபுரம்.

★

ஆரியர்செய் சூழ்ச்சி அரைகொடியி லோடும்நம்
காரியம் வெற்றிபெறும கண்டுள்ளம்--பூரிக்க
நந்திருச்சி மாநாட்டில் நாட்டுவோம் போர்க்கொடியை
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—க. வீ. குருசாமி, சென்னை-12.

★

ஈரோட்டு வாளெடுத்து எங்கள் திருவிடத்தை
வேரோடு நான்கேட்பேன நேராவேல--வேரோடு
வெஞ்சினமே கொண்டுவெட்டி வீழ்த்திடுவேன் வஞ்சகரை
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—நெடுஞ்சேரலாதன், திருக்குடந்தை.

★

பஞ்சத்தில் மக்கள் படும்துயரைக் கண்ணுற்றும்
மஞ்சத்தில் கொஞ்சுகின்ற மாண்பில்லா--வஞ்சகரை
பஞ்சைப்போல் பிய்த்திடவும் பாரஞ்சக் கொன்றிடவும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—செ. ப. விசுவநாதன், சென்னிமலைப்பாளையம்.

◉ பரிசு பெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.